விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

புகைத்தலை தவிர்ப்போம்

இராகம் 01 | தாளம் 30 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 16 செவ்வாய்க்கிழமை (31.07.2012) | பக்கங்கள்: பதினாறு

யாழ்.சட்டத்தரணிகள் சங்கத்துக்குள் முரண்பாடு:

## இருபது முன்னணி சட்டத்தரணிகள் இன்று பகிஷ்கரிப்பை கைவிடுவர்

யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா அபகீர்த்திக்கு உள்ளாக்கப்பட்டபோது அசமந்தமாக இருந்தமையைக் கண்டித்தும் வேறு பல விடயங்களை முன்வைத்தும் யாழ்.சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த சுமார் இருபது முன்னணி சட்டத்தரணிகள் இன்று பணிப் பகிஷ்கரிப்பைக் கைவிட்டுக் கடமைக்குத் திரும்புகின்றனர். இவ்வாறு முன்னணி சட்டத்தரணி மு.றெமிடியஸ் தெரிவித்தார்.

மன்னார் நீதிவான் அபகீர்த்திக்கு உள்ளாக்கப்பட்டதைக் கண்டித்து சட்டத்தரணிகள் என்ற வகையில் எமது பூரண ஆதரவைப் பணிப் பகிஷ்கரிப்புக்கு வழங்கினோம். இந்த விடயம் இப்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்டுள்ளமையும், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இவ்விவகாரத்தைப் பொறுப்பேற்றிருப்பதும் வரவேற்கக்கூடியது 02

## உதயன் மீதான வழக்கு மாவட்ட நீதிமன்றுக்கு

'உதயன்' பத்திரிகை ஆசிரியர் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு யாழ். மாவட்ட நீதிபதி ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட விருக்கிறது. இது சம்பந்தமான அறிவுறுத்தலை நீதிச் சேவை ஆணைக்குழு நேற்று விடுத்தது. யாழ் நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜாவுக்கும் நீதித்துறைக்கும் அச்சுறுத்தலும், அபகீர்த்தியும் ஏற்படும் விதத்தில் நடந்து கொண்டாரென்று மேற்படி பத்திரிகையின் 02

ஆஸி.சென்று கொண்டிருந்த போது வழி மறிப்பு

## திருமலை நீர்கொழும்பு கடலில் மூன்று வள்ளங்களுடன் 103 பேர் கைது

சட்டவிரோதமாக கடல் வழியாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 103 பேரை மூன்று வள்ளங்களுடன் திருகோணமலை மற்றும் நீர்கொழும்பு கடற்பரப்பில் கடற்படையினர் நேற்று கைது செய்துள்ளனர்.

கடந்த 29 ஆம் திகதி சுமார் 8.30 மணியளவில் நீர்கொழும்பு கம்மல்துறை பகுதியில் அவுஸ்திரேலியா செல்ல ஆயத்தமாகவிருந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் இவர்களை அனுப்புவதற்கு முற்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மேலும் இரண்டு பேரை பொலிஸார் கைது செய்தனர். இவர்களிடமிருந்து சுமார் 6 இலட்சத்து 89,000 ரூபாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்வதற்காக 02


## இந்திய துணைத் தூதுவர் கண்டனம்

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மாகாத்மா காந்தியின் சிலை உடைக்கப்பட்டமைக்கு இந்தியத் துணைத் தூதுவர் எம்.மகாலிங்கம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிலை உடைப்பு தொடர்பில் விசாரணை நடத்துமாறு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

காந்தி இந்தியாவிற்கு மட்டும் சொந்தமான மனிதர் அல்ல. அவர் உலகத்தில் உள்ள அனைவருக்கும் சொந்தமான மனிதராகவும் கடவுளாகவும் போற்றப்படுகின்றவர்.

அவ்வாறான ஒருவரின் சிலை உடைப்பானது மனவருத்தத்திற்குரிய விடயம். இந்த விடயம் தொடர்பாக துரித 02



புனர்வாழ்வு பெற்றவர்களுக்கான சுயதொழில் கடனுதவி வழங்கும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது. ஜனாதிபதி புனர்வாழ்வு பெற்ற யுவதி ஒருவருக்கு காசோலையைக் கையளிப்பதைக் காணலாம். அருகில் அமைச்சர் சந்திரசிறி கஜதீரவும் காணப்படுகிறார்.

## கூட்டமைப்புடன் மட்டும் பேசி பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது

ஜனாதிபதி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மாத்திரம் பேசி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. இதற்கு பாராளுமன்றத்தின் மூலமே நிரந்தரமான இறுதித் தீர்வை காண முடியும். எனவே, தமிழ் தேசிய கூட்டமைப்பினர் எல்.ரி.ரி.ஈயைப் போன்று நேரத்துக்கு நேரம் புதிய நிபந்தனைகளை விதித்து, பேச்சு வார்த்தைகளை தட்டிக் கழிப்பது தவறாகும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அலரி மாளிகையில் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களையும் இலத்திரனியல் செய்திப் பிரிவு பொறுப்பாசிரியர்களை சந்தித்து பேசிய போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டுமன்றி இந்நாட்டின் சகல அரசியல் கட்சிகளும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக இனப் பிரச்சினைக்கு சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வை காண வேண்டும். இது என்னுடைய தனிப்பட்ட பிரச்சினை அல்ல இது இந்நாட்டு மக்கள் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினை. 02

## மரக்கிளை முறிந்ததில் 17 படை அதிகாரிகள் படுகாயம்

விமானப்படை, கடற்படை அதிகாரிகள் பயிற்சியொன்றில் ஈடுபட்டிருந்த வேளை மரக்கிளையொன்று முறிந்து விழுந்ததில் 17பேர் காயமடைந்த நிலையில் தியதலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை தியத்தலாவ விமானப்படை பயிற்சி முகாமில் இடம்பெற்றுள்ளது.

மரமொன்றில் ஏறி குறித்த படைவீரர்கள் பயிற்சி 02

காணாமல் போன, களவாடப்பட்ட கடவுச்சீட்டு:

## சட்டவிரோத பயன்பாட்டைத் தடுக்க இன்டர்போலுடன் இணைந்து நடவடிக்கை

காணாமற்போன அல்லது களவாடப்பட்ட கடவுச்சீட்டுகள் பற்றிய முறைப்பாடுகளை செல்வதற்கான புதிய நடைமுறையொன்றினை நாளை 01 ஆம் திகதி முதல் குடிவரவு குடிய கல்வு திணைக்களம் அறிமுகம் செய்துள்ளது.

தமது கடவுச்சீட்டு காணாமற்போன பின்னர் அல்லது களவாடப்பட்டிருந்தால் புதிய கடவுச்சீட்டொன்றை பெறுவதற்காக மட்டுமே பொலிஸ் நிலையம் செல்கிறார்கள்.

ஆனால் கடவுச்சீட்டு காணாமற்போனவுடன் அல்லது களவாடப்பட்ட பின்னர் அதனை முறைகேடாக எவராவது உபயோகிக்கக் கூடும் என்ற எண்ணத்தில் எவரும் உடனடியாக 02

## கலைஞர் கருணாநிதி - மாவை சந்திப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி மாவை சேனாதிராஜா தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியைக் கடந்த ஞாயிறன்று சென்னையில் சந்தித்து உரையாடினார்.

சுமார் ஒரு மணி நேரம் இச்சந்திப்பு நீடித்தது. ஆகஸ்ட் 12ஆம் திகதி நடை பெறவுள்ள டெசோ மாநாடு பற்றி இருவரும் கலந்துரையாடினர்.

டெசோ மாநாட்டில் தமிழீழ ஆதரவுத் தீர்மானம் நிறைவேற்றப்படக் கூடாதென இந்திய மத்திய அரசு அழுத்தம் கொடுத்திருக்கும் நிலையில் தமிழரசுக் கட்சியின் பொதுக் காரியதரிசியான மாவையின் சந்திப்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்





கொழும்பு பம்பலப்பிட்டி சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய ஆடிவேல் ரதபவனி நேற்றுத் திங்கட்கிழமை கொழும்பு மாநகர வீதியெங்கும் வலம்வந்தது. இத் தேர்பவனியை தரிசித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கதிர்வேலாயுத சுவாமியின் அருளாசிகளைப் பெற்றுக்கொண்டார்.

## கூட்டமைப்புடன்...(தொடர்)

எனவே, சகல அரசியல் கட்சிகளுக்கும் இந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக தீர்த்து வைக்கும் கடமையும், பொறுப்பும் இருக்கிறது.

2013ம் ஆண்டு ஓகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் வடமாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது. இந்த தேர்தலை நடத்துவதற்கு முன்னர் அரசாங்கம் பல முன் ஏற்பாடுகளை செய்ய வேண்டியுள்ளது.

கடந்த கால யுத்தத்தினால் தமிழர்கள் மாத்திரம் பாதிக்கப்படவில்லை. முஸ்லிம்களும் சிங்களவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நல்லிணக்க ஆணைக்குழு தனது சிபாரிசுகளில் வட பகுதியில் இடம்பெயர்ந்த தமிழர்கள் மட்டுமன்றி, முஸ்லிம்கள், சிங்களவர்கள் ஆகியோரையும் மீள் குடியேற்ற வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளது. நாம் அதனையும் செய்து முடித்த பின்னரே தேர்தலை நடத்த வேண்டிய கடப்பாட்டினை கொண்டுள்ளோம்.

1981ம் ஆண்டின் வாக்காளர் அட்டவணை மாத்திரமே இப்போது வட பகுதியில் உத்தியோகபூர்வ ஆவணமாக இருக்கினறது. வாக்காளர் இல்லாத காரணத்தினால் சிலர் 200 வாக்குகளுக்கும் குறைந்த வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் இடம் பெற்றன.

எனவே, மக்களுக்கு சுதந்திரமாக சென்று வாக்களிப்பதற்கான ஒரு சுமுகமான சூழ்நிலையை அடுத்தாண்டில் உருவாக்கியதற்கு பின் னரே வடபகுதி தேர்தலை நாம் நடத்துவோம்.

தற்போது வடபகுதியில் வாக்காளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்திருப்பதனால் வடபகுதியில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்பப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 8ல் இருந்து 6 ஆக குறைந்திருக்கிறது. அடுத்தாண்டு ஜூன் மாதம் பூர்த்தி செய்யப்படும் புதிய வாக்காளர் இடாப்பில் மக்கள் தொகையை ஒப்பிட்டு பார்த்த பின்னரே பாராளுமன்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கையை கூட்டுவதா? இல்லையா? அல்லது இதே நிலையில் வைத்திருப்பதா என்று முடிவெடுக்கப்படும்.

நல்லிணக்க ஆணைக்குழுவை நான்தான் நியமித்தேன். அக்குழுவின் சிபாரிசுகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவில் கூடங்குளம் எனுமிடத்தில் அமைந்துள்ள அணுமின் உலையினால் இலங்கைக்கு ஆபத்து ஏற்படாது என்று இந்தியா உறுதியளித்திருக்கிறது.

இந்தியா எங்களுக்கு அரசியல் ரீதியில் தீங்கிழைத்து வருகிறதென்று உங்களில் சிலர் கூறுகின்றனர். நாம் எந்தவொரு நாட்டினால் எமது நாட்டின் பாதுகாப்பையும், இறைமையையும் விட் டுக்கொடுக்க உறுதியளிக்கிறேன் என்றார்.

## மரக்கிளை முறிந்ததில்...(தொடர்)

ஒன்றில் ஈடுப்பட்டிருந்த போது மரக்கிளை முறிந்து விழுந்ததினால் விபத்து இடம்பெற்று இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மரண அறிவித்தல்

### திருமதி. இரத்தினசபாபதி இராஜேஸ்வரி (ராசாத்தி)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தின சபாபதி இராஜேஸ்வரி 29.07.2012 ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா இரத்தினசபாபதி (அப்பாத்துரை) அவர்களின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரன் (ஆசை) சுத்தானந்தன் (சிறி), சந்திரலீலா (வவி), சந்திரமோகனா (மானா) சத்தியானந்தன் (ராசன்) சந்திரகாந்தா (ராசினி), கிருபானந்தன் (ஈசன்) (பிரான்ஸ்) காலஞ்சென்ற சந்திரவசந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராஜேஸ்வரி (வசந்தி), சாவித்திரி (ராசாத்தி), செல்வராசா (திரு முருகன் காட்வெயார்), பத்மநாதன் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்) தர்மலதா (ஓய்வுநிலை ஆசிரியர், யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) கோபி நாதன் (இளவரசி காலணியகம், சுன்னாகம்) குமுதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

உமாசுதன் (புத்தளம்), கணேசுதன் (அவுஸ்திரேலியா), பிரமிளா (லண்டன்), கஜீந்தா (லண்டன்), கிருஷ்ணமேனன், சாந்தமேனன், றாஜிப்பிரபா (கண்டி), பிரசாத் (லண்டன்), தனுசா (கனடா), ஜெனனி (கனடா) ஜெகனி (கனடா), றிசோகரன், தசாகரன் (இந்தியா), ஜீவாகரன், டல்ஷினி, அபிஷேக், ஷிபிஷேக் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும், நிஷோத்திரா (புத்தளம்), அக்ஷயா (கனடா), யாதவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.07.2012) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

***சீக்கோ லேன், உப்புமடம் சந்தி,***
***கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.***

தகவல்:
குடும்பத்தினர்.

## உதயன் மீதான வழக்கு...(தொடர்)

ஆசிரியர் பிரேமானந் மீது யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. நீதி நலன் கருதி இந்த வழக்கு வேறொரு நீதிபதி முன்னிலையில் விசாரிக்கப்பட வேண்டுமென்று கோரி நீதிச் சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலை நீதிவான் கணேசராஜா கேட்டிருந்தார்.

கடந்த ஒன்பதாம் திகதி இந்த வழக்கு யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது நீதிமன்றத்தில் ஆஜரான பத்திரிகை ஆசிரியர் பிரேமானந் நிபந்தனையற்ற விதத்தில் மன்னிப்புக் கோரியிருந்தார். அத்துடன் எதிர்காலத்தில் அவதூறான, உண்மைக்குப் புறம்பான செய்திகளை உதயன் பத்திரிகை இனிமேல் பிரசுரிக்க மாட்டாதென்றும் நீதிமன்றத்தில் உறுதியளித்திருந்தார். இதனையடுத்து இந்த வழக்கு ஆகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதிக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்தில் ஜூன் மாதம் 28ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் 'உதயன்' பத்திரிகை ஆசிரியருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடாதெனக் கோரும் ரிட் மனுவொன்றினை மேற்படி பத்திரிகை மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தது. கடந்த ஆறாம் திகதி இந்த ரிட் மனு மேன் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது இருபதாம் திகதி வரை யாழ். நீதிவானுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

உதயன் ரிட் மனு தொடர்பான வழக்கு மீண்டும் மேன்முறையீட்டு நீதிமன்றில் அழைக்கப்பட்டபோது ஆகஸ்ட் 28 ஆம் திகதி வரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரை யாழ். நீதிவான் மீதான இடைக்காலத் தடை நீடிக்கப்பட்டது.

## சட்டவிரோத பயன்பாட்டை..(தொடர்)

முறைப்பாடு செய்வதில்லை. இதனால் மற்றொருவரின் கடவுச்சீட்டை பயன்படுத்தி வெளிநாடுகளுக்குச் செல்லுதல், வெளிநாடுகளில் அதனை பயன்படுத்துதல் என்பன நடைபெறுகின்றன.

குடிவரவு - குடியகல்வு திணைக்களம் இப்போது அறிமுகப்படுத்தியுள்ள புதிய நடைமுறையினூடாக இன்டர்போல் ஊடாக இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகளிலும் காணாமற்போன களவாடப்பட்ட கடவுச் சீட்டை பயன்படுத்த முடியாத நிலை தோன்றும்.

களவாடப்பட்ட அல்லது காணாமற்போன தனது கடவுச்சீட்டு தொடர்பாக ஒருவர் முறைப்பாடு செய்த பின்னர் அவர் அதற்கு பதிலாக புதிய கடவுச் சீட்டையே பெற வேண்டும். காணாமற்போன களவாடப்பட்டதாக கூறப்பட்ட கடவுச் சீட்டு சில மாதங்களின் பின்னர் உரியவருக்கு கிடைத்தாலும் அவர் அதனை உபயோகிக்க முடியாது. இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச ரீதியில் அக்கடவுச் சீட்டு இரத்துச் செய்யப்பட்டுவிடும்.

ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் புதிய நடைமுறை தொடர்பாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதான கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேரா து தொடர்பாக கருத்துத் தெரிவித்தார்.

கடவுச் சீட்டின் முக்கியத்துவம் கடவுச்சீட்டை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும். காணாமற் போனோர் களவாடப்பட்டாலோ நாம் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் என்ன? வெளிநாட்டில் வாழும் ஒரு இலங்கையர் தனது கடவுச் சீட்டை தொலைத்துவிட்டால் அல்லது அவரிடமிருந்து யாராவது திருடிச் சென்றால் அவர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் என்ன? என்பது பற்றியும் பிரதான கட்டுப்பாட்டாளர் நாயகச் சூலானந்த பெரேரா விளக்கமளித்தார்.

## திருமலை...(தொடர்)

புறப்பட்டுச் சென்றவர்கள் கடலில் இருப்பதாக கைது செய்யப்பட்டவர்கள் மூலம் கிடைத்த தகவலின் அடிப்படையில் கடற்படையினருக்கு தகவல்கள் வழங்கப்பட்டன.

இத்தகவலின் அடிப்படையில், நீர்கொழும்பு கடற்பரப்பில் மரிய தின்டரி என்ற ஆழ்கடல் வள்ளத்திலிருந்த 25 பேரும் அஷேன் புத்தா என்ற ஆழ்கடல் வள்ளத்திலிருந்த 44 பேரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் சமந்தா தத்சரண என்ற ஆழ்கடல் வள்ளத்திலிருந்த 34 பேரை திருகோணமலை கடல் பரப்பில் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், சிலாபம், வவுனியா, முல்லைத்தீவு, கல்முனை, நாவலப்பிட்டி, திருகோணமலை, நீர்கொழும்பு, பாணந்துறை, குருணாகல் மற்றும் மன்னார் பகுதிகளைச் சேர்ந்த 103 பேரே மூன்று வள்ளங்களுடன் கைது செய்யப்பட்டதாக கடற்படையின் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

நீர்கொழும்பு கடற்பரப்பில் கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு முகத்துவாரம் கடற்படை தளத்துக்கும் திருகோணமலை கடற்பரப்பில் கைதானவர்கள் திருகோணமலைக்கு கொண்டுவரப்பட்டனர்.

## கலைஞர்...(தொடர்)

தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும், விக்ரமபாகு கருணாரத்ன போன்ற சிங்கள அரசியல் வாதிகளும் டெசோ மாநாட்டில் பங்குபற்றுவரென்று மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

## இந்திய...(தொடர்)

விசாரணை நடத்துமாறு பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

இதேவேளை, மீண்டும் அதே இடத்தில் சிலை அமைப்பது தொடர்பாக விசாரணையின் பின்பே தீர்மானிக்கப்படும் என்றும். இந்த சிலை உடைப்பு தொடர்பாக இரண்டுபேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## இருபது முன்னணி சட்டத்தரணிகள்...(தொடர்)

என்றும் முன்னணிச் சட்டத்தரணி றெமிடியஸ். இதற்குப் பின்னரும் பணிப் பகிஷ்கரிப்புத் தொடர வேண்டுமானால் அமைச்சர் ரிசாட் பதியுதீன் கைது செய்யப்படும்வரை தொடர வேண்டும். அமைச்சர் கைதுசெய்யப்படக்கூடிய சூழ்நிலை உடனடியாகத் தென்படவில்லை.

அமைச்சருக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வந்துள்ளமை வரவேற்கக்கூடியது நீதி நிலைநாட்டப்படுமென நம்புகிறோம்.

யாழ். நீதிவான் அபகீர்த்திக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டபோது யாழ் சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அமைதியாகவும் அசமந்தமாகவும் இருந்தனர். இதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. இவர்களில் பலர் யாழ். நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்கு வெளியே வாழ்பவர்கள் மல்லாகம் போன்ற நியாயாதிக்க எல்லைகளில் வாழ்பவர்களுக்கு இது குறித்துக் கொஞ்சமேனும் அக்கறையில்லை. அரசியல் செல்வாக்கும் அதிகாரமும் உள்ளவர்களின் செல்வாக்குகளுக்கு அடிபணிந்து அமைதியாக இருக்க முடியாது என்றும் முன்னணி சட்டத்தரணி ரெமிடியாஸ் கூறினார்.

# அசையும், அசையா சொத்து விபரங்களை அறிவிக்கவும்

## அமைச்சர் சுசில்

மூன்று மாகாண சபைகளுக்கும் நடைபெறவுள்ள தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடும் முன்னாள் முதலமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் தத்தமது அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்குமாறும் அவற்றை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதை தவிர்க்குமாறும் சகல வேட்பாளர்களுக்கும் எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளதாக ஐ.ம.சு.மு.வின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதற்கமைய தத்தமது சொத்துக்கள் தொடர்பிலான விபரங்கள் சமர்ப்பித்துள்ளோம் என்று முன்னாள் முதலமைச்சர்களும் உறுப்பினர்களும் எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்த விசேட செய்தியாளர் மாநாடு கொழும்பிலுள்ள மகாவலி நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. இங்கு ஊடகங்களுக்கு விளக்கமளித்த அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேலும் குறிப்பிடுகையில், இம்முறை மாகாண சபை தேர்தலில் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உறுப் பினர்கள் பலர் போட்டியிடவுள்ளனர். இவ்வாறு போட்டியிடுபவர்கள் தேர்தலுக்காக வேட்புமனுத் தாக்கல் செய்த தினத்திலிருந்து தேர்தல் நடைபெறும் வரையிலான காலப் பகுதியில் தாம் தற்போது வகிக்கும் பதவிகளிலிருந்து விடுமுறை பெற்றுக் கொள்ளுமாறும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரும் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் அரச மற்றும் பொது சொத்துக்களை பயன்படுத்துவதை முற்றாக தவிர்த்துள்ளதாக அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேலும் தெரிவித்தார்.

# நூல் வெளியீட்டு விழா

(தெல்லிப்பழை)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் கலை,- வர்த்தக மாணவ மன்றத்தினால் இன்று செவ்வாய்க் கிழமை 12 ஆவது வணிகநாதம் சிறப்பு மலர் வெளியீட்டு வைக்கப்படவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக பேராசிரியர் க.தேவராஜா கலந்துகொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் திருநெல்வேலி கிளை உதவி முகாமையாளர் வ.நிகுஷன் கலந்து கொள்கிறார். இவ்விழா பாடசா லையின் புதிய கேட்போர்கூட மண்டபத்தில் நடைபெறும்.

# 'தேசமான்ய' விருது

ஜனாதிபதியினால் வழங்கப்படுகின்ற உயரிய விருதான தேசமான்ய விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட இந்து - பௌத்த கலாசாரப் பேரவையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எம்.ஜீ.எஸ்.இராமச்சந்திரனுக்கு "தேசமான்ய" விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நாட்டிய மயில் நடனப்போட்டியின் போது இவருக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதேவேளை, கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் நாட்டிய கலைமாமணி சாந்தினி சிவனேசனுக்கு இதன்போது "தேசபந்து" விருது வழங்கப்பட்டது.

# வடக்கில் அரசு தோல்வியுறும் என்கிறார் ரணில்

வடமாகாணசபைத் தேர்தலே தற்போது தேவை எனவும் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் அல்ல. அரசாங்கம் வடமாகாணசபைத் தேர்தலை நடத்தினால் அரசாங்கம் அங்கு நிச்சயம் தோல்வியடையும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற வேட்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

# கல்வியல் கல்லூரியின் சான்றிதழ் வழங்கும் விழா

யாழ்ப்பாணம், வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரிகளில் கற்பித்தல் தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம் அடுத்த மாதம் 15 ஆம் திகதி காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை இரு அமர்வுகளாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

காலை 9மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது அமர்வில் 2005/2007, 2006/2008 கல்வி ஆண்டுகளில் கற்பித்தல் தேசிய டிப்ளோமா பாடங்களை பயின்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெறும். மாலை 2 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது அமர்வில் 2007/2009, 2008/2010 ஆம் கல்வி ஆண்டுகளில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடங்களை பயின்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெறும்.

# செஞ்சொற் செல்வரின் பணி நயப்பு விழா

(மாவிட்டபுரம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனின் பணிநயப்பு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் நாளை முதலாம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பிரதி அதிபர் த.தவராஜா தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.


இவ்விழாவில் வரவேற்புரையை கல்லூரியின் உப அதிபர் சாந்தி நாகராஜாவும் வாழ்த்துரைகளை ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சிவாஜியும் நிகழ்த்துவர்.

இதில், வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் உட்பட பல கல்விமான்கள் கலந்து கொள்வர்.

# கோரிக்கை

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி பலாலி காங்கேசன் துறை ஊறணி பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்கள் தங்களை மீளகுடியமர்வதற்கான நடவடிக் கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். மயிலிட்டி பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளிலும் நலன்புரி முகாம்களிலும் வாழும் மக்களின் மீள்குடியேற்றத்தினை துரிதப்படுத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் வலிகாமம் வடக்கு பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபைத்தவிசாளர் சோ.சுகிரன் தலைமையில் நடைபெற்றபோது மக்களினால் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது.



உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் உரையாற்றுவதையும், மாணவர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் : மாவிட்டபுரம் நிருபர்)*

# முஸ்லிம் மக்களை அரவணைத்து ஆட்சி நடத்த கூட்டமைப்பு தயார்

## சம்பந்தன் எம்.பி.

தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைக்கும் நிலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு ஏற்படுமானால் நியாயமான அளவிற்கு தாராளமாக முஸ்லிம் மக்களை அரவணைத்து பங்காளியாக ஆட்சி நடத்துவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தயாராக உள்ளது என அக்கட்சியின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைப்பதற்காக திருகோணமலை சிவன் கோவில் வீதியில் நேற்று சனிக்கிழமை மாலை மாகாண சபை தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது சிறப்பு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இணைந்த வடக்கு கிழக்கு வரலாற்று பாரம்பரிய தாயகத்தில் தமது பிரதேசத்தை தாமே ஆள கூடியதான நிரந்தரமானதும் நியாயமானதும் நிலைத்து நிற்க கூடியதுமான அரசியல் தீர்வு ஒன்றை கண்டேயாக வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

கிழக்கு மாகாண சபை தேர்தலில் ஆளும் கட்சியில் போட்டியிடுகின்ற ஒரு தமிழ் வேட்பாளர் கூட வெற்றி பெறாத நிலையை தமிழ் மக்கள் ஏற்படுத்த வேண்டும். வெற்றி பெறும் தமிழ் வேட்பாளர்கள் அனைவரும் தமிழத் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களாக இருக்க வேண்டும் என்பதை தமிழ் மக்கள் வாக்களிப்பு தினத்தன்று உறுதிசெய்ய வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலின் பின்னர் ஆளும் கட்சியினருடன் இணைய முடியாத நிலையை இது ஏற்படுத்தும். தேர்தலில் போட்டியிடுவதற்காக ஆளும் கட்சியுடன் சேராது தனித்து போட்டியிட்ட பின்னர் அரசுடன் இணையலாம் என்று எவராவது எண்ணினால் அது தவறான செயல் மாத்திரம் அல்ல, நம்பி வாக்களித்த மக்களுக்கு செய்யும் துரோகமாகியும் விடும் என்றார்.

# சிவாஜலிங்கத்திடம் வாக்கு மூலம் பெற உத்தரவு

நீதிமன்ற அவமதிப்பு குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்திடம் விசாரணையை மேற்கொள்ளுமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் மா.கணேசராசா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

மேலும் இது தொடர்பான வழக்கு விசாணைகளை எதிர் வரும் ஒக்ஸட் மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

யாழ்.நகரப் பகுதியில் நடத்தப்பட ஏற்பாடாயிருந்த ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றின்போது நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தடையுத்தரவை உதாசீனம் செய்ததாக சிவாஜிலிங்கத்தின் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறுமி மீது துஷ்பிரயோகம் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

கதிர்காமம் புனித பூமியில் 13 சிறுமி ஒருவரை கடுமையான முறையில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய பொலிஸ் கான்ஸ்ரபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கதிர்காமம் பெரஹராவை பார்ப்பதற்காகச் சென்ற சிறுமியையே இவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று திஸ்ஸமகாராம நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கதிர்காமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## விளையாட்டு அமைச்சின் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் நடாத்தும் மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் / உதைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளர், உயர் விளையாட்டு டிப்ளோமா பாடநெறி - 2012 விண்ணப்பம் கோரப்படல்

## விளையாட்டு அமைச்சின் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் நடாத்தும் மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் / உதைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளர், உயர் விளையாட்டு டிப்ளோமா பாடநெறி - 2012

# விண்ணப்பம் கோரப்படல்

விளையாட்டு அமைச்சின் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் நடாத்தும் மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் / உதைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளர் , உயர் விளையாட்டு டிப்ளோமா பாடநெறி தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பாடநெறியின் காலம் 6 மாதங்களாகும் . அதில் முதன் மூன்று (03) மாத காலப் பகுதியில் கோட்பாடுகள் மற்றும் செயன்முறைப் பயிற்சியும் அவற்றிற்குரிய பரீட்சைகளும் நடாத்தப்படும் . பாடநெறியினைப் பூர்த்திசெய்வதற்காக மீதமுள்ள (03) மாத காலத்தினுள் விடயத்திற்கு உரித்தான ஆய்வு நூல் ஒன்றினை முன்வைத்தல் வேண்டும் . இப் பாடநெறி தொடர்பாக 2012.07.27 ஆம் திகதியன்று 45 வயதினைவிடக் கூடாத (அரச சேவையில் உள்ளோருக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.) கீழ் தரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் தானே தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவமொன்றினை **2012.08.27 ஆம் திகதிக்கு முன்னர் பதிவாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் , இல. 100/7, சுதந்திரம் மாவத்தை, கொழும் பு 7** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் . (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் / உதைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளர், உயர் விளையாட்டு டிப்ளோமா பாடநெறி** எனக் குறிப்பிடப்படல் வேண்டும் ). மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் தொடர்பாக விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் கீழே தரப்பட்டுள்ளன :-

**மொழிமூலம் - சிங்களம்**

(1) தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் நடாத்தும் விளையாட்டு டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந் திருத்தல். **அல்லது**

**(2)** அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் தொடர்பாக 6 மாதகாலப் பாடநெறயொன்றினை பயின்றிருத்தல். **அல்லது**

**(3)** மூன்று வருட (கல்வியியற் கல்லூரி) உடற் கல்வி டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந் திருத்தலுடன் தேசிய **அல்லது**

தேசிய கனிஷ்ட அணியொன்றினை பிரதிநிதித்துவம் செய்த வீரராக இருத்தல். **அல்லது**

தேசிய மட்டத்திலான வீரரினை அல்லது வீராங்கனை யினை உருவாக்கிய பயிற்றுவிப்பாளராக இருத்தல்

உதைபந்தாட்டம் தொடர்பாக விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் கீழே தரப்பட்டுள்ளன :-

**மொழிமூலம் - சிங்களம்**

(1) தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் நடாத் தும் விளையாட்டு டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந் திருத்தல். (விசேடத்துவத்தின் போது உதைபந்தாட்டத்தினை கற்றவர்களுக்கு முன்னுரிமை) **அல்லது**

(2) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் உதைபந் தாட்டம் தொடர்பாக 6 மாதகாலப் பாடநெறியொன்றினை பயின்றிருத்தல். **அல்லது**

(3) மூன்று வருட (கல்வியியற் கல்லூரி) உடற் கல்விடிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தலுடன் தேசிய **அல்லது** தேசிய கனிஷ்ட அணியொன்றினை பிரதிநிதித்துவம் செய்த வீரராக இருத்தல் **அல்லது** தேசிய மட்டத்திலான வீரரினை **அல்லது** வீராங்கனையினை உருவாக்கிய பயிற்றுவிப்பாளராக இருத்தல்.

**குறிப்பு:**

**(அ)** முழுநேரம் அரச சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகள் அவர்களின் பங்குபற்றலினை உறுதிப் படுத்துவதற்கு ஏற்புடைய கடமை விடுமுறை தொடர்பான ஆவணங்களை முன்வைத்தல் வேண்டும்.

**(ஆ)** தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளால் பாடநெறிக் கட்டணமாக ரூபா 20,000 செலுத்துதல் வேண்டும்.

**(இ)** தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் பாடநெறி தொடர்பாக தெரிவுசெய்யப்படுவர் .

**சாந்த வீரசிங்க, பணிப்பாளர்,**
**தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்.**

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2012

## COMPETITIVE EXAMINATION FOR FILLING VACANCIES IN THE PUBLIC MANAGEMENT ASSISTANTS' SERVICE CADRE IN SRI LANKA MISSIONS A BROAD - 2012

இலங்கையின் வெளிநாட்டுத் தூதரங்களில் ஏற்பட்டுள்ள உள்ளூர் தேர்வு அடிப் படையில் அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதி பெறும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண அரச முகாமைத் துவ உதவியாளர் சேவை மற்றும் உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைகளிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் 2012, நவெம்பர் மாதம் நடாத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சைக்கு இவ் விண்ணப்பதாரர்கள் தோற்ற வேண்டும்.

**2. தகைமை.**- விண்ணப்பதாரர் கீழே குறிப்பிடப்பட்டிருக் கும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**(அ)** விண்ணப்பத் திகதியன்று விண்ணப்பதாரர் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண சபை, அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, அல்லது உள்ளூராட்சி சபை அரச முகாமைத்துவ உதவியார் சேவை வகுப்பு I இல் அல்லது அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண சபை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை அல்லது உள்ளூராட்சி சபை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு II இல் 5 வருடகால திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

**(ஆ)** பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது குறிப்பிடப்படும் பரீட்சார்த்தியின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல தொடர்பாடல்களுக்கும் உரித்துடையதாவதுடன் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் ஏற்படும் மாற்றங்கள் சம்பந்தமான கோரிக்கைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு.**- மேலே குறிப்பிடப்பட்ட சேவைகளிலல்லாத பிற முகாமைத்துவ உதவியாளர் சேவைகளிலிருந்து விண்ணப்பம் செய்வதற்குத் தகுதியற்றவராவர் .

**(இ)** விண்ணப்பம் முடிவடையும் திகதியன்று 56 வயதுக் குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**(ஈ)** விண்ணப்பத் திகதியன்று மேலே (அ) இன் கீழே குறிப்பிடப்பட்ட சேவைகளின் வகுப்பு II இன் வினைத் திறன்காண் பரீட்சையில் சித்தி யெய்தியிருத்தல் வேண்டும்.

**(உ)** விண்ணப்பம் செய்யும் காலப் பகுதிக்கு முன்னைய ஐந்து வருட காலத்தில் அவ் அவ்வருடத்திற்குரிய சம்பள ஏற்றங்களை உரிய திகதியில் பெற்றிருத்தல் வேண்டும்.

**(ஊ)** எச்சரிக்கை தவிர்த்து, ஒழுக்காற்றுத் தண்டனைகள் எதுவும் பெறாதவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** I:- தற்பொழுது வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் சேவையாற்றுவோர் இப் பரீட்சைக்கு விண்ணபிக்கத் தகுதியற்றவராவர்.

குறிப்பு II:- விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் போது தகைமை உள்ளாரெனினும் அதன்பின் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு/ தரம் I இற்கு மேலான ஒரு சேவைக்கு மாற்றப்பட்டாலோ அல் லது வேறொரு சேவைக்கு நியமிக்கப்பட்டாலோ இலங்கை தூதரகங்களுக்கு உள்நாட்டு சேவையால் நிரப்பப்படவுள்ள முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு நியமனம் பெறத் தகுதியற்றவராவர். அப்படி ஏற்படும் சாத்தியக் கூறுகள் இருப்பின் அது இப்பகுதி **(அ)** வின் பிரகாரம் தாக்கம் ஏற்படலாமாகயால் இதைவிட்டு வெளிவிவகார அமைச்சு செயலாளருக்கு அறிவித்தல் கொடுப்பது விண்ணப்பதாரியின் கடமையாகும்.

**குறிப்பு** III.- நிர்வாகம் மற்றும் கணக்கீட்டு அறிவாற்றல் உள்ளவர்க்கும் ஆங்கிலம் மற்றும் வேறு மொழிகளில் திறனாற்றல் உள்ளவர்க்கும் (எழுத்தும் கதைத்தலும்) முன்னுரிமை வழங்கப்படும். வேலை

**4 பகுதி I** : தொகுதி (II) - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை - 2012.07.27 பார்க்கக் கூடியளவு வெளிநாட்டு மொழிகள் தெரிந்திருப்பின் அது மேலதிகமான தொரு தகைமையாகக் கருதப்படும்.

**குறிப்பு** IV.- கணனி அறிவு ஒரு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும் என்பதுடன் அத் தகைமை பெற்றமை யின் திறமைப் பாடுகள் பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும் .

**3.தேர்வுமுறை.**- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். எழுத்துப் பரீட்சை மூலமும் வெளிவிவகார அமைச்சு செயலாளரினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை மூலமும் தேர்வு நடைபெறும். இப் பரீட்சைகள் கொழும்பில் நடைபெறும். பரீட்சை நடத்துதல்,பெறு பேறுகளை வழங்குதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

**3.1 எழுத்து மூலப் பரீட்சை.**- கீழே தரப்பட்டுள்ள எழுத்து மூலப் பாடங்கள் ஒவ்வொன்றும் தலா 100 புள்ளிகளைக் கொண்டிருக்கும் :-

வினாத்தாள் வினாத்தாள் கால வரை இலக்கம்

**01** கணக்கீட்டு முறைகள் 2 மணித்தியாலம் **02** தாபன விதிக் கோவை மற்றும் அலுவலக நடைமுறை 2 மணித்தியாலம் **03** ஆங்கிலம் 2 மணித்தியாலம் **04** பொது அறிவு 1 மணித்தியாலம்

**குறிப்பு :**

**(1) கணக்கீடு:**- அரச அலுவலகங்களில் பயன்படுத் தப்படும் கணக்கு முறைகள், கணக்குத் தொடர்பான அறிவும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறன் என்பவற்றை அளவிடுதலை இவ்வினாத்தாள் கொண்டிருக்கும் . சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்பட வேண்டும்.

**(2)**தாபன விதிமுறைகளும் அலுவலக நடைமுறைகளும்-

அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் தொடர்பான அறிவையும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறன் என்பவற்றை அளவிடுதலை இவ் வினாத்தாள் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப் படவேண்டும் .

**(3) ஆங்கிலம்:**- விண்ணப்பதாரியின் ஆங்கில புரிந் துணர்வு மற்றும் எழுத்து மூல தொடர்பாடல் என்பவற்றைப் பரீட்சிப்பதாக இவ் வினாத்தாள் அமைந்திருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக் கப்படவேண்டும் .

**(4) பொது அறிவு.**- இலங்கையின் அரசியல் , சமூக சேவைகள், பாரம்பரியங்கள், பொருளாதாரச் சுற்றாடல் மற்றும் இலங்கையின் சரித்திரம் , புவியியல் அத்துடன் இன்றைய சர்வதேச நிகழ்வுகள் என்பவற்றை அடக்கிய வினாத்தாளாக இது அமையும் . இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடையளிக்கும் வினாக்களையும் கொண்டிருக்கும். தேர்வுநாடிகள் சகல வினாக்க ளுக்கும் விடையளிக்க வேண்டும் .

**3.2** நேர்முகப் பரீட்சை :

**3.2.1** நேர்முகப் பரீட்சைக்குரிய புள்ளிகள் 100 என்பதுடன் நேர்முகப் பரீட்சையானது வெளிவிவகார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் குழுவினால் நடாத்தப்படும்.

**3.2.2** விண்ணப்பதாரர் ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் 40 சதவீத புள்ளிகள் பெற வேண்டியதுடன் மொத்தப் புள்ளிகள் 200 அல்லது அதற்கு மேலாக பெறுபவர்களே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுவர்.

**4.** பதவிக்கமர்த்தும் நியதிகள்:

**4.1** இப் பரீட்சைகளின் பெறுபேறுகள் மூலம் தெரிவாகும் உத்தியோகத்தர்கள் இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் குறிப்பிட்டதொரு ஒரு வருட காலத்திற்கு கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சில் சேவை யாற்றும் படி கோரப்படுவர். இச் சேவைக் காலத்தில் அவரது வேலை மற்றும் நல்லொழுக்கம் என்பன சார்பாக அதிருப்தி காணபடுமிடத்து அவரது தெரிவு நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு.

**4.2** அந்தந்த தூதரகங்களின் தேவைகளைப் பொறுத்து உத்தியோகத்தரின் தகைமை (வெளிநாட்டு மொழி என்பன) மற்றும் திறமை ஆகியவற்றினைப் பொறுத்து நியமனம் வழங்கப்படும். இப்படியான நியமனங்கள் மேற்கொள்ளப்படும் போது உத்தியோகத்தரின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் முறைப்பாடுகளையிட்டு (பிள்ளைகளின் கல்வி போன்ற) கவனிக்க அமைச்சிற்கு எதுவிதகடப்பாடும் இல்லை என்பதுடன் உத்தியோகத்தர் உலகின் எந்தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டாலும் அத்தூதரகத்திற்கு கடமையின் பொருட்டு அவர் சமுகமளிக்க வேண்டும்.

4.3 வெளிவிவகார அமைச்சு செயலாளரினால் விதிக்கப்படும் விதிகள், நிபந்தனைகளுக்கமைய சாதாரணமாக மூன்று வருடங்கள் வெளிநாட்டில் சேவையாற்ற வழமையாகக் கோரப்படுவதுடன் அதற்குரிய ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட வேண்டும். இக் காலவரை முடிவுற்றதும் உத்தியோகத்தர் இலங்கைக்கு திரும்பிவரவேண்டும்.

**4.4** இலங்கை வெளிநாட்டு தூதரகங்களுக்கு தெரிவாகும் உத்தியோகத்தர்கள் இலங்கையின் சேவையாற்றும் போது அவர்கள் கொழும்பிலேயே பெறும் நிரந்தர சம்பளத்தை தொடர்ந்து பெறுவார்கள். வெளிநாட்டில் சேவை செய்யும் காலத்தில் வெளிநாட்டுக்கான பணிக் கொடுப்பனவு ஒன்றும் பெறுவர் .

**4.5** உத்தியோகத்தர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டதும் தெரிவு செய்யப்பட்டவரினது வெளிநாட்டுச் சேவைக் காலத்தில் அவரினது, அவரினது வாழ்க்கைத் துணையினது மற்றும் அவரில் தங்கியுள்ள 21 வயதிற்குக் குறைவான இரு பிள்ளைகளுக்கு மட்டும் நியமனம் பெறும் நாட்டிற்குச் செல்வுதற்கான மற்றும் திரும்பி வருவதற்கான போக்குவரத்துச் செலவுகள் , அங்கு தங்குமிடச் செலவுகள் மற்றும் பிற சலுகைகளை வெளிவிவகார அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்டபடி அரசாங்கம் பொறுப்பேற்கும் .

**5.** விண்ணப்பிக்கும் முறை:

**5.1** விண்ணப்பப் படிவம் இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஏ-4 அளவிலான கடதாசியில் மூன்று பக்கங்களில் முறையே 01 தொடக்கம் 05 வரை முதலாம் பக்கத்திலும் 06 தொடக்கம் 14 வரை இரண்டாம் பக்கத்திலும் மற்றும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் தயாரிக்கப்பட வேண்டும் . மாதிரிப் படிவத்தின்படி தயாரிக்கப்படாத மற்றும் தேவைப்படும் தகவல்கள் சரியாகக் கொடுக்கப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர் விண்ணப்பங்களின் படப் பிரதிகளை வைத்திருத்தல் உசிதமானது என அறிவுறுத்தப்படுகின்றனர.

**5.2** சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் விண்ணப்பத்தைத் தயாரிக்கும் விண்ணப்பதாரர்கள் சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கு மேலதிகமாக பரீட்சையின் பெயரை ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும் .

5.3 விண்ணப்பங்களை விண்ணப்பதாரர்கள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும் . அதில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பதாரர் வெளிநாட்டில் சேவையாற்றுவதற்குத் தகுதியுள்ளவரா என்பதுடன் விண்ணப்பத்தில் கூறியிருப்பவை உண்மையானவை என்பதையும் அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவாகும் பட்சத்தில் அவரை தற்போதைய சேவையிலிருந்து உடனடியாக விடுவிக்க முடியும் என்பதாகவும் உறுதிப்படுத்த வேண்டும் .

**5.4** பூ ர் த் தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **"பரீட்சை ஆணையாளர் நாயகம் , ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீ ட்சைகள் பிரிவு, பரீட்சைத் திணைக்களம் , பெலவத்தை, பத்தரமுல்லை"** என்னும் முகவரிக்கு 2012, ஓகஸ்து 27 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கும்படியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் அரச முகாமைத்துவ உதவியாளர் தேர்வுக்கான பரீட்சை"** என எழுதப் பட்டிருத்தல் வேண்டும் .

**6. பரீட்சைக் கட்டணம்:**- பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆகும். இக் கட்டணம் எந்தவொரு மாவட்ட/ பிரதேச செயலகத்திலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 என்றகணக்கிற்கு செலுத்தப்பட்டு விண்ணப்பதார[illegible] பெயருக்குப் பெறப்படும் பற்றுச்சீட்டு விண்ணப்பப் படிவத்[illegible] உரிய இடத்தில் ஒட்டப்பட வேண்டும். பற்றுச் சீட்டு இலக்[illegible] செலுத்தப்பட்ட செயலகம், திகதி மற்றும் தொகை ஆகிய விபரங்கள் விண்ணப்பப்டிவத்தில் உரிய இடத்தில் குறிப்பிடப்பட வேண்டும். பரீட்சைக்கான கட்டணம் வேறு வகைகளில் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டோ அல்லது தபால் / காசோலைகளோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பற்றுச் சீட்டின் படப்பிரதி ஒன்றை வைத்திருத்தல் சாலச் சிறந்தது. பரீட்சைக் கட்டணம் எக் காரணத்தைக் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.

7. பூ ர் த் தி பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் . விண்ணப்பம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டதென்பதான குற்றச் சாட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**8.** பரீட்சைக்கு அனுமதித்தல்:

**8.1** விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றது குறித்து அறிவிக்கப்படமாட்டாது.

**8.2** விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்ற அனைவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்பி வைப்பார். அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதும் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைத்ததற்கான அறிவித் தலொன்று பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் . அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரகாரம் விண்ணப்பதாரிகள் எவருக் காவது பத்திரிகை அறிவித்தலின் பின் 2 அல்லது 3 நாட்களுக்குள் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெ[illegible]தவிடத்து அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்[illegible]பட வேண்டும். விண்ணப்பதாரரிடமுள்ள விண்ணப்பப் படிவ[illegible] பிரதியின் மற்றும் பணம் கட்டிய பற்றுச்சீட்டின் ஒப்புதல் செய்யப்பட்ட படப் பிரதிகளையும் மற்றும் பதிவுத் தபால் செய்த பற்றுச் சீட்டையும் (வெளிப் பிரதேசத்திலிருந்து விண்ணப்பம் அனுப்பப்பட்டிருந்தால் அனுமதி அட்டை அனுப்புவதற்கு வசதியாக தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு) தங்களது கோரிக்கையுடன் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்கவேண்டும்.

**8.3** பரீட்சைக்கு சமுகமளிக்கும் பரீட்சார்த்தியொருவர் கையொப்பமிட்டு உறுதிசெய்யப்பட்ட தனது அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் . அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சை எழுத அனுமதிக்கப்படமாட்டார்.

**8.4** பரீ ட் சார் த் தி ஒருவர் தனக் கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சையை எழுத வேண்டும் . பரீட்சார்த்தி தான் பரீட்சை எழுதும் முதல் நாளன்று தனது அனுமதி அட்டையைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும் . பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டிய விதிகள் இவ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக் குக் கட்டுப்படுவர். இவைகளை மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக இடமுண்டு.

**8.5** பரீட்சைக்கான அனுமதிச் சீட்டை விண்ணப்பதாரருக்கு வழங்குவதன் மூலம் பரீட்சார்த்தி பரீட்சைக்கான தகைமைகள் எல்லாவற்றையும் பெற்றுள்ளார் என்றும் கருத்துகொள்ளப்படலாகாது.

**9. பரீட்சைக்கான மொழி:**

**9.1** பரீட்சை சிங்களம்/தமிழ் /ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும. பரீட்சை எழுதும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**9.2** ஒரு பரீ ட் சார்த்தி ஆங்கில வினாத்தாளைத் தவிர்த்து மற்றைய எல்லாப் பாடங்களையும் ஒரே மொழிலேயே எழுத வேண்டும்.

**10.** பொய்யான தகவல்களை வழங்குகின்றமைக்கான தண்டனை :

10.1 பரீட்சார்த்தி ஒருவர் தனது அறிவின்படி சமர்ப்பித்த ஏதாவது விபரங்கள் தவறானது என்று கண்டுபிடிக்கபபடுமிடத்து அல்லது வேண்டுமென்றே ஏதாவது தேவைப்படும் தகவலை மறைத திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட வாய்ப்புள்ளதுடன் இதன் காரணமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் தகுதியற்றவராவார்.

**10.2** பரீட்சார்த்தி ஒருவர் எச்சந்தர்ப்பத்திலாவது பரீட்சைக்கு முன்போ பரீட்சை நடக்கும் பொழுதோ அல்லது பரீட்சைக் குப் பின்னரோ தகுதியற்றவர் எனக் காணப்படுமிடத்து அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு.

**11.** பரீட்சார்த்தியின் ஆளடையாள அத்தாட்சி :

**(7 ஆம் பக்கம் பார்க்க)**

# ஈழக் கனவுகளுக்கு புத்துயிரளிக்க ஐ.நா.செயலாளரும் உதவுகின்றார்

## - அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

ஈழக்கனவுக்கு புத்துயிரளிக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் தமிழ்நாட்டின் தலைவர்களும் முயற்சிக்கின்றனர் என மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறினார்.

மஹரகமயில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜாதிக ஹெல உருமயவின் தேசிய மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"இரண்டாவது ஈழ யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு த.தே.கூ. தலைவர் இரா. சம்பந்தன் முயற்சிக்கிறார். நியூயோர்க், லண்டன், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், இந்தியா போன்ற நாடுகளிலும் நகரங்களிலும் ஈழ இனவாதத்தை உயிர்ப்பிக்க முயற்சிக்கின்றனர்.

இதற்கு ஐ.நா. பொதுச்செயலாளரும் உதவுகிறார். உலக தமிழர் இயக்கத்தின் பேச்சாளர் சுரேஷ் சுரேந்திரன், முத்துவேல் கருணாநிதி, ஜெயலலிதா ஜெயராம் போன்ற தமிழக அரசியல்வாதிகள், ஆகியோர் தமிழ் ஈழத்தை மீண்டும் அமைப்பது குறித்து கலந்துரையாடுகின்றனர்.

இதேவேளை இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஸ்மா ஸ்வராஜ், இனவாதத்தை உருவாக்க முயற்சிக்கும் நிலையில் இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டமை குறித்து தற்போது பேசுகிறார். அவர்கள் இலங்கக்கு ஆலோசனை வழங்குவதற்கு முன்னர், அவர்கள் தமது சொந்த நாட்டில் இடம்பெற்ற கொலை தொடர்பாக பேசுவதுடன் கொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி வழங்கி, அவர்களின் சொந்த நாட்டில் இனவாதத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்" என அவர் கூறினார்.

# சட்டவிரோத வெளிநாட்டு பயணம்: இரண்டு முகவர்கள் உட்பட நால்வர் நீர்கொழும்பில் கைது

வெளிநாடொன்றிற்கு சட்டவிரோதமான முறையில் தப்பிச் செல்ல முயற்சித்த இருவர் மற்றும் சட்டவிரோதமாக வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்பும் முகவர்கள் இருவர் நீர்கொழும்பு பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட முகவர்களிடமிருந்து 6,98,000 ரூபா பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வெளிநாட்டிற்கு செல்ல முற்பட்ட இருவரும் மன்னாரைச் சேர்ந்தவர்கள் எனவும் முகவர்கள் இருவரும் நீர்கொழும்பைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸர் தெரிவித்தனர்.

அண்மையில் க‌_ல் மார்க்கமாக பலர் வெளி,ாட்டிற்கு தப்பிச் செல்வதற்கு ;தி_டமிட்டுள்ளதாக பொலிஸாருக்கு அவர்கள் தகவல் வழங்கியுள்ளனர்.

இதன்படி தாம் கடற்படையினருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை அண்மைக் காலமாக இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செல்ல முயற்சிப்போர் தொகை அதிகரித்துள்ளது.

# ஒரு வாரகாலத்தில் 38 பேர் மீது பொலிஸார் வழக்கு பதிவு

வலிகாமம்

கடந்த ஒரு வார காத்தில் யாழ் மாவட்ட பொலிசார் பல்வேறு குற்றச்செயல்களுடனும் தொடர்படையவர்கள் எனக் கருதப்பட்ட முப்பத்தெட்டுப் பேர்கள் மீது நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்

கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட நால்வரும் சட்டவிரோதமான முறையில் சாரய விற்பனையில் ஈடுபட்ட ஐந்துபேருமா திருட்டு மணல் ஏற்றிய ஒருவரும் குடிபோதை பத்துப்பேரும் சுற்றுச் சூழுலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் நடந்து கொண்ட பதினெட்டுப் பேரின் மீதும் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# முகாமைத்திறன் காண் போட்டிகள்

மாவிட்டபுரம்

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தினை முன்னிடடு வடமகாண கூட்டுறவு நிறுவனங்களுக்கிடையில் முகாமைத்திறன் காண் போட்டிகள் நடாத்தப்படவுள்ளது.

இவ் முகாமைத்திறன் காண் போட்டிகள் வடக்கு மாகாணத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கங்கள் பனை-தென்னை வளஅபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்கள்கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கங்கள் விவசாயக் கூட்டுறவுச்சங்கங்கள் இரண்டாம் படிச் சங்கங்கள் போண்றவற்றுக்கிடையில் நடத்தப்படும். இப்போட்டிக்கு மேற்படி கூட்டுறவுச்சங்கங்கள் தயார் நிலையில் தம்மை தயார்ப்படுத்தி கொள்ளுமாறும் மாவட்ட மற்றும் மாகாண ரீதியில் நடத்தப்படும் போட்டியில் வெற்றி பெறும் சங்கங்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுனள்ளதாக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

# கடலில் மூழ்கிய அறுவர் மீட்பு

புத்தளத்தில் இருந்து கதிர்காமத்திற்கு சென்ற யாத்திரிகர்கள் அகிரிந்த கடற்பரப்பில் நீராடுவதற்குச் சென்ற வேளை நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த 6 பேர் பாதுகாப்பு அதிகாரிகளினால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

காப்பாற்றப்பட்ட இவர்கள் ஆறு பேரும் கிரிந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திஸ்ஸமகாராம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# சிகிரியாவில் காட்டுத் தீ

சிகிரியா - திகம்பதக என்ற பிரதேசத்தில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் 15 ஏக்கர் காட்டுப் பகுதி எரிந்து அழிவடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு ஏழு மணியளவில் மேற்படி காட்டுத் தீ பரவ ஆரம்பித்துள்ளது.

இந்தக் காட்டுப் பகுதியில் யானைகளின் நடமாட்டம் அதிகமாக காணப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீயின் காரணமாக யானைகளுக்கு உயிர்ச் சேதமோ காயமோ ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் திணைக்கள அதிகாரிகள் இன்று கொழும்பில் சந்திப்பு

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக தேர்தல் அதிகாரிகள், தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவால் கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் அதிகாரிகளுக்கும் ஆணையாளருக்கும் இடையிலான கலந்துரையாடல் இன்று இடம் பெறவுள்ளது.

இந்த கலந்துரையாடலில் தேர்தல் அதிகாரிகள், சிரேஸ்ட தேர்தல் அதிகாரிகள் என அனைத்து தேர்தல் கடமையில் ஈடுபடும் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளதாக தேர்தல்கள் திணைக்கள பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதன் போது 2012ஆம் ஆண்டு தேர்தல் பெயர் பட்டியல் மற்றும் குறித்த மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் இதுவரை எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரவித்தார். ள

# மட்டக்களப்பில் மறைத்துவைக்கப்பட்ட ஆயுதங்கள், வெடிபொருட்கள் மீட்பு

மட்டக்களப்பு முறுத்தானை மற்றும் பேத்தாழை ஆகிய பிரதேசங்களில் இருந்து ஆயுதங்கள் சில மீட்கப்பட்டுள்ளதாக வாழைச் சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை, முறுத்தானையில் உள்ள காட்டுப்பகுதியில் உரப்பையினால் சுற்றப்பட்ட நிலையில் மரமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு சொட்கண் ரக துப்பாக்கிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையிலேயே இவை மீட்கப்பட்டதாகவும் இவை புலிகளின் காலத்தில் இப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை வாழைச் சேனை, பேத்தாளை விநாயகபுரம் பகுதியில் உள்ள வீட்டின் கிணறு ஒன்றில் இருந்து இரு கைக்குண்டுகள் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

நீண்ட நாட்களாக பாவிக்காதிருந்த கிணறு ஒன்றை துப்புரவு செய்யும்போது பையினால் சுற்றப்பட்டிருந்த நிலையில் அவற்றை கண்ட வீட்டின் உரிமையாளர்கள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதன்படி ஸ்தலத்துக்கு வந்த வாழைச்சேனை பொலிஸார் மற்றும் குண்டு செயலிழக்கச்செய்யும் பிரிவினர் குண்டை செயலிழக்கச் செய்துள்ளனர்.

# இயற்கை முறை மருந்துகளே ஆரோக்கியத்துக்கு சிறந்தது

## வவுனியா விவசாய பணிப்பாளர்

(வவுனியா)

மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு உடல் நல குறைபாடுகள் மற்றும் நோய்களுக்கு அன்றாடம் நாம் உண்ணும் இரசாயனம் கலந்த மரக்கறி வகைகளே காரணம் என வவுனியா மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் சகிலாபானு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயிர்ச் செய்கையில் செயற்கை ரீதியிலான மருந்து வகைகளை பயன்படுத்துவதால் பல நோய்கள் ஏற்படுகின்றன. காய்கறிச் செய்கையில் பங்கசு, பற்றீரியாக்கள் அழிப்பதற்காக குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள் செயற்கை மருந்துகளை பயன்படுத்துகின்றனர். இதனால் நச்சுத்தன்மையுள்ள காய்கறிகளை உண்ணும் நிலைக்கு நாம் தள்ளப்படுகின்றோம்.

இவ்வாறான பிரச்சனைகளில் இருந்து விடுபடுவதற்காக இயற்கை மருந்து வகைகளை காய்கறிச் செய்கைக்கு பயன்படுத்தி வருகின்றோம்.

இதற்காக வேப்பிலை, உள்ளிச் சாறு, புகையிலை போன்றவற்றை விசிறி பழ வகைகளில் உள்ள கிருமிகள், பற்றீரியாக்களை அழிப்பதற்கான முயற்சியிலும் வெற்றி கண்டுள்ளோம்.

மரக்கறி வகை உற்பத்தியை பெருக்குவதற்கு சேதன பசளைகளை பயன்படுத்தி வருகின்றோம். இம்முறையை வீட்டுத் தோட்டம் முதல் பெரிய பயிர்ச் செய்கை வரை மேற்கொண்டு வருகின்றோம்.

அத்துடன் திவிநெகும பயிர்ச் செய்கையில் நாம் வெற்றி கண்டு வருகின்றோம். வவுனியாவில் பெரும்பாலான கிராமங்களில் இம்முறையை நடைமுறைப்படுத்தியும் வருகின்றோம்" என்றார்.

# இளைஞர்,யுவதிகளுக்கான ஆளுமை விருத்தி அரங்க பயிற்சிப் பட்டறை

மாவிட்டபுரம்

யு.என்டி.பி நிறுவனத்தின் அனுசரனையில் நடாத்தப்பட்டு வருகின்ற பிரதேச இளைஞர் யுவதிகளின் ஆளுமை திறன் விருத்தி அரங்க பயிற்ச்சிபட்டறை நிகழ்வின் அங்கமாக பண்டத்தரிப்பு சாந்தை பிரதேச இளைஞர் யுவதிகளுக்கான திறன் விருத்தி அரங்க பயிற்ச்சி பட்டறை நிகழ்வு சாந்தை விநாயகர் கலை பண்பாட்டு மன்ற தலைவர் இரா. இதயராஜ் தலைமையில் கலை பண்பாட்டு மன்ற மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு விசேட அதிதியாக யு.என.டி.பி நிறுவனத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் மகேஸ்வரன் கலந்து கொண்டார். திறன்விருத்தி அரங்க பயிற்சி பட்டறையின் வளவாளர்களாக புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியருமான எஸ்.ரிகுமரன் புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப்பணிப்பாளரும் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியருமான எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் கலந்து கொண்டு அரங்க பயிற்ச்சி பட்டறையை திறம்பட வழிநடத்தினார்கள்.

இப் பயிற்சி பட்டறையில் 30 இற்கு மேற்பட்ட இளைஞர்

யுவதிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.இப்பயிற்சி பட்டறையில் இளைஞர் யுவதிகளின் ஆளுமைத்திறன் விருத்திசார் பயிற்சிகள் தெருவெளி ஆற்றுகைக்கான களப்பயிற்சி என்பன வழங்கப்பட்டன. பயிற்சிபட்டறை ஊடாக தெருவெளி நாடகத்தயாரிப்பிற்கான கட்டமைப்பு உருவாக்கப்பட்டு ஆற்றுகையாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்குழுவினர் கிராமங்களில் வழிப்புணர்வுசார் நாடக ஆற்றுகையை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆற்றுக்குள் பாய்ந்தது லொறி

## 14 பேர் காயம்

பலாங்கொடை - கல்தோட்டை, வெலிஓயாவிற்குள் லொறி ஒன்று விழுந்ததில் 14 பேர் காயமடைந்துள்ளனர். இவ் விபத்துச் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக கல்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் ஆண்கள் 8 பேரும் பெண்கள் 6 பேரும் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் பலாங்கொடை மற்றும் கல்தோட்டை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாதம்
Thamil Naatham

ஜுலை மாதம் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## சட்டமும், சமயமும் மன்னாரில் மட்டரகமாகிப் போனது ஏன்?

வட பகுதியில் ஐந்து மாவட்டங்கள் உள்ளன. மன்னார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகியவையே இந்த ஐந்துமாகும். இவற்றில் மன்னார் அண்மைக் காலமாக கொதி நிலையில் இருந்து வருகிறது. அங்கு இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் என்று மூன்று சமயம் சார்ந்த மக்களும் கணிசமான அளவுக்கு வாழ்கிறார்கள்.

1990ஆம் ஆண்டு வடக்கிலிருந்து 78ஆயிரம் முஸ்லிம்கள் புலிகளால் வெளியேற்றப்பட்டார்கள். அப்போது மன்னார்வாழ் முஸ்லிம்களும் தமது வாழ்விடங்களிலிருந்து குடிபெயர்க்கப்பட்டார்கள். முஸ்லிம் மக்களையே பெரும்பான்மையாகக் கொண்ட உப்புக்குளம் என்ற கிராமத்திலிருந்தும் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டார்கள். இந்த மக்கள் புத்தளத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அகதிகளாகக் குடிபெயர்ந்தார்கள். உப்புக்குளம் என்ற இந்த முஸ்லிம் கிராமத்துக்கு அண்மித்ததாகக் கோந்தைப்பிட்டி என்ற மீன்வாடி இருக்கிறது. இங்கு மீனவர்களின் வாடிகள் மட்டுமல்ல, படகுகளும் தரித்து நிற்கும் இடமாகவும் இது உள்ளது.

விடத்தல்தீவு - பெரும்பாலும் றோமன் கத்தோலிக்க மக்களைக் கொண்ட ஒரு கிராமம், உப்புக்குளத்திலிருந்து 1990இல் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதுபோல, விடத்தல்தீவிலிருந்தும் பல றோமன் கத்தோலிக்கக் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன. இது நடந்தது 1999ஆம் ஆண்டு. உப்புக்குளத்திலிருந்து மக்களை விரட்டியவர்களே விடத்தல்தீவிலிருந்தும் மக்களை விரட்டினார்கள். ஆனால் இந்த இரண்டு கிராம மக்களையும் ஒரே தரப்பினர் விரட்டினாலும், விரட்டியதற்கான நோக்கம் மட்டும் வித்தியாசமானது. இந்த விடத்தல்தீவு மீனவர்கள் பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்த பின்னர், இறுதியில் தோட்டவெளி என்ற கிராமத்தில் 2002ஆம் ஆண்டு குடியேறினார்கள். உப்புக்குளம் என்ற முஸ்லிம் கிராமத்துக்கும் தோட்டவெளிக்குமிடையில் ஒன்பது கிலோ மீற்றர் தூரமே இடைவெளியுள்ளது.

உப்புக்குள மீனவர்கள் தமது சொந்த மண்ணை விட்டு விரட்டப்படுவதற்கு முன்னர் பயன்படுத்தியதே கோந்தைப்பிட்டி வாடிப் பகுதியாகும். சில காலத்தின் பின்னர் தோட்டவெளி மீனவர்கள் கோந்தைப்பிட்டி வாடியைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். உப்புக்குளத்தைவிட்டு வெளியேறிய முஸ்லிம் மீனவர்கள் மீண்டும் தமது சொந்த இடத்துக்குத் திரும்பியதும் கோந்தைப்பிட்டி வாடியைப் பயன்படுத்துவது தொடர்பாக இரு தரப்பு மக்களுக்குமிடையில் சச்சரவுகள் ஏற்பட்டன. இது வெறுமனே இரண்டு கிராமங்கள் சார்ந்த பிரச்சினையாக மட்டுமல்ல, இரு சமயம் சார்ந்த பிரச்சினையாகவும் பார்க்கப்பட்டது. அப்படி ஒரு தோற்றமும் இந்தப் பிரச்சினைக்குக் கொடுக்கப்பட்டது. இதுவே பிரச்சினையின் தோற்றுவாயும், மையமுமாகும்.

இதன் பின்னர்தான் "நீதிவான் மிரட்டப்பட்டார். நீதிமன்றம் தாக்கப்பட்டது" என்ற செய்திகள் எல்லாம் வெளிவந்தன. இப்போது ஏட்டிக்குப் போட்டியாகக் குற்றச்சாட்டுகளும், சேறு பூசுதல்களும் எல்லாமே தொடர்கின்றன. மன்னார் நீதிமன்றத்துக்குள்ளும் புகுந்த பிரச்சினை இன்று வெளியே தலைநீட்டிக் கொண்டிருக்கிறது. நீதிமன்றப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட அமைச்சரும், நீதிபதியும் கூட வெவ்வேறான சமயங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் இரு தரப்பிலும் அப்பாவிகள் உசுப்பிவிடப்படுகிறார்கள்.

வன்செயல் எதிர்ப்பு நடவடிக்கைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும். நீதித்துறை மீதான தாக்குதல்களும், சிறப்புரிமை மீறல்களும் நிறுத்தப்பட வேண்டும். கோந்தைப்பிட்டி வாடிப் பகுதியின் சொந்தக்காரர்கள் உப்புக்குள மீனவர்கள்தான் என்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது. அதாவது முஸ்லிம் மீனவச் சகோதரர்கள்தான் அவர்கள். அதற்காக விடத்தல்தீவு றோமன் கத்தோலிக்க மீனவச் சகோதரர்களை எதிரிகளாகவோ, ஏதிலிகளாகவோ பார்க்கக்கூடாது. சமூக, சமயத் தலைவர்கள், அரசின் உயர்மட்டத்தினர் அனைவரும் ஒன்றுபட்டுப் பிரச்சினையைத் தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமைச்சர் நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஒன்றித்து நிற்கிறது. பூரண விசாரணை வேண்டும். பிழை செய்திருந்தால் அமைச்சர் தண்டிக்கப்பட வேண்டும். அமைச்சர் மட்டுமல்ல, இந்தச் சிக்கலான பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட முக்கிய புள்ளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் நீதியின் முன்னால் நிறுத்தப்பட வேண்டும். ஆனாலும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கிறார்களே.

கடந்த வருடம் நவம்பர் மாதம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வெள்ளைக்கொடி வழக்குத் தொடர்பான தீர்ப்பு வழங்கப்பட்டபோது, கறுத்தக் கோட்டுப் போட்ட சட்டத்தரணிகள் நீதிமன்றத் தளபாடங்களை அடித்து நொருக்கினார்களே! தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளைப் பார்த்து அவதூறு பொழிந்தார்களே! அப்போது ஏனய்யா சட்டத்தரணிகளும் சட்டமும் தலை குனிந்து போனது?

எது எப்படியிருந்தாலும் மன்னார் முறுகல் ஓர் இன மோதலுக்கு வழிவகுக்காமல், பார்த்துக் கொள்ள வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2219506, பக்ஸ்: 021-2219505
e-mail: tnaatham@yahoo.com

# எங்கட அப்பா எங்கே?

"எங்கட அப்பாவைக் கண்டு பிடிச்சித் தருவீங்களா" போரில் காணாமல் போனதாகக் கருதப்படும் சண்முகதாஸின் ஐந்து வயது மகனின் கேள்வி இது. வடக்கில், மன்னார் மாவட்டம் விடத்தல்தீவில் வசிக்கும் இந்தக் குழந்தை மட்டுமல்ல இலங்கையின் வடக்கு, கிழக்கில் வாழும் பல நூறு குழந்தைகளின் கேள்வி இது.

போர் முடிவுற்று மூன்று வருடங்களான போதிலும், போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பெண்கள் உளவியல் தாக்கங்களிலிருந்து மீளாதவர்களாக, அடிப்படை வாழ்வின் சவால்களை வெற்றிகாண முடியாதவர்களாக உள்ளனர்.

குறிப்பாக விதவைகள், குடும்பத்துக்குத் தலைமை தாங்கும் பெண்கள் எண்ணற்ற சவால்களுக்கு மத்தியில் தாயாகவும், குடும்பத் தலைவனின் பொறுப்பிலுமாக குடும்பத்தை நிர்வகிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

வடக்கில், மன்னார் விடத்தல் தீவைச் சேர்ந்த மாலினி சண்முகதாஸ் மூன்று பிள்ளைகளின் தாய். கணவன் காணாமல் போனதாக தெரிவிக்கும் இவர், ஏனைய பாதிக்கப்பட்ட பெண்களைப் போலவே தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த பிரக்ஞைகளுக்கு எதுவித தீர்வும் அற்ற இருளான வாழ்வை வாழ்கிறார்.

"அப்பாவைப் பத்தி ஆர் விசாரிச்சாலும் இப்பிடித்தான் கேட்பான்" என கண்கள் கலங்குகிறார் மாலினி சண்முகதாஸ். வயது 42.

"2009.05.17 அன்று ஓமந்தை தமிழ் மகா வித்தியாலயத்தில் சுற்றிவளைப்பின் போதுதான் அவர் காணாமல் போனார். நான் அப்போது முல்லைத்தீவு இராமநாதன் முகாமில் பிள்ளைகளுடன் இருந்தேன்." என தனது கணவர் காணாமல்போன நிகழ்வை மாலினி சண்முகதாஸ் நினைவு கூர்கிறார்.

வடக்கு கிழக்கில் இவ்வாறான இருள் சூழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள 89,000 விதவைகள் வாழுகின்றனர். இவர்களில் 65 சதவீத மானவர்கள் 30 வயதுக்குட்பட்ட இரண்டு அல்லது மூன்று பிள்ளைகளைக் கொண்ட பெண்கள் என்பது மற்றுமொரு அதிர்ச்சி தரும் செய்தி. இளம் விதவைகள் சம்பந்தமான விடயமும் ஆழமான கண்ணோட்டங்கள் வாயிலாக நோக்கப்படவேண்டிய பிரச்சினையாகும். 30 வருட கால யுத்தத்தின் பல்பரிமாண விளைவுகளில் ஒன்றாக இது நோக்கப்படவேண்டும். யுத்த காலங்களில் இயக்கம் சிறுமிகளை பலவந்தமாக போராட்டத்தில் இணைத்துக் கொண்டதற்கு அஞ்சிய பெற்றோர் தமது பெண் பிள்ளைகளுக்கு இளம் பராயத்திலேயே திருமணம் மேற்கொண்டதன் விளைவே இன்று பெருந் தொகையான இளம் விதவைகளை நாம் சந்தித்துள்ளோம்.

இது தவிர காணாமல் போனோரின் மனைவியர், சரணடைந்த அல்லது முன்னரே சிறைப்பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளின் மனைவியர் எனப் பெருந்தொகையான பெண்கள் குடும்பத்துக்குத் தலைமை தாங்கும் பெண்களாக மாறியுள்ளனர். காணாமல் போனவர்கள் பற்றிய சரியான கணிப்பீடுகளை பெறுவது சிரமமாகவே உள்ளதையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டியுள்ளது.

"இராணுவ முகாம்கள், வவுனியா ஜோசப் முகாம், ஐ.சி.ஆர்.சி, யூ.என்.எச்.ஆர், மனித உரிமைகள் ஆணைக்குழு, காணாமல் போனோரைத் தேடியறியும் குழு என்று எல்லா இடங்களிலும் அவரைப் பற்றிய முறைப்பாடுகளையும், தகவல்களையும் கொடுத்திருக்கிறேன். மூன்று வருடங்களாக அவரை சளைக்காமல் தேடுகிறேன். சுற்றிவளைப்பின்போது அவர் காணாமல் போனதால் அவர் கைது செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகப்படுகிறேன். ஆனால், இராணுவம் அவரைக் கைது செய்யவே இல்லை என்று மறுக்கின்றது. அவரில்லாமல் நாங்கள் மிகுந்த துயரத்திற்கு ஆளாகியிருக்கிறோம். நிலையான வருமானம் இன்றி படிக்கின்ற பிள்ளைகளுடன் ஒவ்வொரு நாளையும் கடத்துவதென்பது பெரிய போராட்டம்" என மேலும் தனது நிலையை விபரிக்கிறார் மாலினி சண்முகதாஸ்.

விடத்தல்தீவில் வசிக்கும் மற்றுமொரு விதவையான 27 வயது கவிதா இரு பிள்ளைகளின் தாய். விடத்தல் தீவிலிருந்து இடம்பெயர்ந்து மாத்தளன் பகுதியில் இருக்கும்போது 2009.03.23 அன்று இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் கணவனை இழந்தவர். மனநிலை சீரற்ற நிலையில் இரண்டு பிள்ளைகளுடன் வாழ்கிறார்.

"எறிகணைத் தாக்குதலில் அவர் சிதறுண்டு இறந்தது இன்னும் கண்ணுக்குள்ள இருக்கு. எனக்கு ஒன்றிலுமே மனம் ஒட்டவில்லை. யாரோடும் பேசப்பிடிக்கல்லை. பிள்ளைகள் ரெண்டு பேர் இருக்கிறதனால் வாழுகிறேன்" என கவிதா சலிப்பான மனநிலையில் பேசுகிறார்.

விதவைகளான பெண்களில் பலர் போரினால் அங்கவீனமடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களில் சிலர் கைகள், கால்களில் ஒன்றை அல்லது இரண்டையும் இழந்துள்ளனர்.

முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் வாழும் விதவைகளின் நிலை மிக பின்னடைந்ததாகவே உள்ளது. ஜீவனோபாயத்திற்கு வழியற்ற நிலையில் பாதிக்கப்பட்ட பெண்கள் பலர் விபச்சாரத் தொழில் ஈடுபடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சுமார் 200 விதவைகள் விபச்சாரத்தில் ஈடுபடுவதாக சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனால் இந்த எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்றே சந்தேகிக்கப்படுகின்றது. யுத்தத்திற்குப் பின்னரான மறுசீரமைப்பு, மீள்கட்டுமான நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படாததன் விளைவாகவும், குடும்பத்துக்குத் தலைமை தாங்கும் பெண்கள் பொருளாதார ரீதியாக ஸ்திரமற்ற நிலையில் இருப்பதனாலும் இவ்வாறான நிலை உருவாகியுள்ளது. மற்றுமொரு பக்கத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும் பெண்களை இவ்வாறான நிலைக்கு நிர்ப்பந்திப்பதை மறுக்கமுடியாது.



கிழக்கில் மட்டக்களப்பு கிரான் பகுதியில் வசிக்கும் சாந்தி 28 வயது இளம் பெண். போரினால் விதவையானது மட்டுமல்ல ஒரு காலை இழந்து வலதுகுறைந்தவரும் கூட. இரண்டு பிள்ளைகளின் தாய்.

"அரசசார்பற்ற நிறுவனமொன்று சுயதொழில் உதவியாக 50,000 பணம் வழங்கியது. அதில்தான் இந்த சில்லறைக் கடையைத் திறந்தேன். போர் எனது கணவனைப் பறித்து என்னை விதவையாக்கியது. என் காலைப் பறித்து என்னை ஊனமாக்கியது. என் நம்பிக்கை என்னோடுதான் இருந்தது. அதுதான் என்னை வாழவைக்கிறது."


சாந்தியின் குரலில் உள்ள உத்வேகமும், துணிவும் எல்லோருக்கும் நம்பிக்கை தருவதாக உள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் திறக்கப்பட்ட சில்லறைக் கடை இப்போது அந்தப் பகுதியிலேயே பெரிய கடையாக முன்னேற்றமடைந்துள்ளது.

வாகரையைச் சேர்ந்த 33 வயதான மல்லிகா போரினால் கணவனை இழந்த பெண்களில் ஒருவர். மூன்று பிள்ளைகளின் தாய்.

"கணவனை இழந்த பெண்களுக்கு தரப்பட்ட நஷ்டஈட்டை தொழிலுக்கான முதலாகப் பயன்படுத்தினேன். முதலில் முட்டைக் கோழி மட்டும்தான் வளர்த்தேன். இப்போது இறைச்சிக் கோழிகளும் வளர்க்கிறேன்" என தனது சுயதொழில் அறிமுகத்தையே தனது அறிமுகமாக்கிக் கொள்ளும் பெண்ணாக காண்பிக்கிறார் மல்லிகா.

"பள்ளிக்கூடம் போற இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்.

(10ஆம் பக்கம் பார்க்க)



தேசிய புத்தாக்கக் கண்காட்சியில் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்டுள்ள யாழ் .தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களான த.கோபிகரன் மற்றும் த.நிசாந்தினி உபகரணங்களுடன் நிற்பதை படத்தில் காணலாம். (உடுவில் நிருபர்)

## இன்றைய சிந்தனை

- ஜேம்ஸ் அலன்

ஆற்றல், மதிகூட்பம் மற்றும் அன்பு ஆகிய வற்றாலான பிறப்பாகிய - மற்றும் உங்கள் சொந்த எண்ணங்களின் எஜமானராகிய நீங்கள், ஒவ்வொரு சூழ்நிலைக்கும் உரிய திறவுகோலைக் கைக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் என்னவாக விரும்புகிறீர்களோ அதுவாகவே உங்களை ஆக்கிக் கொள்வதற்கான உங்களுள் மாறுதலை எற்படுத்திப் புத்துயிர் அளிக்கும் - கிரியா ஊக்கியை உங்களுக்குள்ளேயே நீங்கள் கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய மிகப் பலவீனமான மற்றும் மிகவும் நெறி தவறிய நிலையிலும் கூட நீங்களே எப்போதும் உங்கள் எஜமானர். ஆனால் உங்கள் பலவீனத்திலும் தாழ்நிலையிலும் நீங்கள் உங்கள் குடும்பத்தை ஒழுங்கற்ற முறையில் நிர்வகிக்கும் முட்டாள்தனமான எஜமானராயிருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் சூழ்நிலையைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க ஆரம்பிக்கும்பொழுதும், எந்த நியதியின் அடிப்படையில் உங்கள் வாழ்க்கை நிர்மாணிக் கப்பட்டிருக்கிறதோ அதற்கான தேடலைச் சிந்தையுடன் துவங்கும் போதும் உங்கள் ஆற்றல்களை மதிநுட்பத்துடன் வழிநடத்திச் செல்லும், மற்றும் நன்மை பயக்கும் விஷயங் களுக்கு உங்கள் எண்ணங்களை வடிவாக்கம் செய்யும். விவேகமான எஜமானராக நீங்கள் ஆகிவிடுகிறீர்கள்.

அதீதத் தேடுதலின் மூலமும் சுரங்கம் தோண்டுதலின் மூலமும் மட்டுமே தங்கமும் வைரங்களும் பெறப்படுகின்றன. உங்கள் ஆன்மாவெனும் சுரங்கத்துக்குள் நீங்கள் ஆழமாகத் தோண்டினால் உங்கள் வாழ்க்கையோடு தொடர்புடைய ஒவ்வொரு உண்மையையும் கண்டுபிடிக்க முடியும். பொறுமையான பயிற்சியின் மூலமும் ஆராய்ச்சியின் மூலமும் காரணியையும் விளைவையும் ஒன்றோடொன்று தொடர்பு படுத்தியும், அற்பமான, தினசரி நடப்பினையும் கூட புரிந்துணரும் சக்தி, விவேகம் மற்றும் வல்லமை ஆகியவற்றுக்கு வழிகோலும் உங்களைப் பற்றிய தன்னறிவைப் பெறுவதற்குரிய ஒரு உபாயமாக உபயோகப்படுத்தி உங்கள் வாழ்க்கையை வடிவமைப்பவரும் நீங்கள்தான். மற்றும் உங்கள் தலையெழுத்தை நிர்மாணிப்பவரும் நீங்கள்தான் என்ற உண்மையை நீங்கள் ஐயந்திரிபற நிரூபிக்கலாம்.

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் அமுலுக்கு வராது

"தேசிய பந்தோபஸ்துக்குப் பங்கம் ஏற்படும் விதத்தில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் அமுல் படுத்தப்பட மாட்டாது" ஊடக அமைச்சின் செயலாளர் சரித ஹேரத் தெரிவித்தார் 2009ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவுக்கு வந்தபோதும் எல்லாவற்றையும் எல்லோருடனும் அரசாங்கத்தால் பகிர்ந்து கொள்ள முடியாது என்றும் அவர் சொன்னார்.

பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக் கான சார்க் ஊடக உள்ளக பயிற்சித் திட்டம் தொடர்பான மாநாடு கொழும்பு தலதாரி ஹோட்டலில் நடைபெற்று வருகிறது. இரண்டாம் நாள் நிகழ்வில் உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது. மிக முக்கியமான தகவல் களைக் கேட்டுப் பெற் றுக் கொள்வதின் மூலம் வெளி நாட்டுச் சக்திகள் உட் பட பல்வேறு அக்கறை கொண்ட தரப்பினர் தேசிய பந்தோபஸ்துக்குப் பங்கம் ஏற்படுத்தக் கூடிய நிலை குறித்தும் அவர் விளக்கினார்.

## நெசவுப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

உடுவில்

நல்லூர் நெசவுப் பயிற்சிப் பாடசாலைக்கு பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

இவ் நெசவுப் பயிற்சிப் பாடசாலைக்கு 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட 8ம் வகுப்புச் சித்திடையந்தவர்கள் பயிலுநர்களுக்கான விண்ணப்பத்தினை முகாமையாளர், நல்லூர் நெசவுப் பயிற்சிப் பாடசாலை, பருத்தித்துறை வீதி, பாரதி சிலையடி, நல்லூர் என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பயிலுநர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பழைய மாணவரின் ஆக்கபூர்வ அன்பளிப்பு

உடுவில்

யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ் கலவன் பாடசாலைக்கு பழைய மாணவன் த. கேதீஸ்வரநாதனால் பதினைந்து லட்சம் ரூபா செலவில் வகுப்பறைக் கட்டிடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

கனடாவில் வசிக்கும் இவர் தனது தாயாரின் ஞாபகார்த்தமாக இந்த வகுப்பறைக் கட்டிடத்தினை அமைத்து வழங்குகிறார்.



யா/சுன்னாகம் மயிலிணி சைவ மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி மாணவனுக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (உடுவில் நிருபர்)

## விண்ணப்பம் கோரப்படல்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

11.1 ஒரு பரீட்சார்த்தி தனது பரீட்சை நிலைய மேற்பார்வை யாளரிடம் தனது அடையாளத்தை அவர் தோற்றும் ஒவ்வொரு பாடத் திற்கும் நிரூபிக்கும்படி வேண்டப்படுவர். அதற்கமைய கீழே தரப்படும் ஏதாவதொரு அடையாளச் சான்று போதுமானதாகும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக் களத்தினால் விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை:

(ஆ) செல் லுபடியான கடவுச் சீட்டு.


12. இது சம்பந்தமாக வெளிவிவகார அமைச்சின் செயலாளரின் முடிவு இறுதியானதாகும் .

கருணாதிலக அமுணுகம, செயலாளர் ,
வெளிவிவகார அமைச் சு. வெளிவிவகார அமைச்சு,
"குடியரசுக் கட்டிடம் ",
த.பெ. இல. 583,கொழும் - 01. 2012, யூலை 27.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**
**இலங் கை வெளிநாட்டுத் தூதரகங்களில்**
**அரச முகாமைத் துவ உதவியாளர் சேவை**
**வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான**
**போட்டிப் பரீட்சைக்குரிய விண்ணப்பம் - 2012**
**Application for the Competitive Examination for Filling Vacancies in the Public Management Assistants' Service Cadre in Sri Lanka Missions Abroad - 2012**

பகுதி அ

(அலுவலக உபயோகத்திற்கு)
தாங்கள் உரித்துடைய சேவை :
அரச முகாமைத் துவ உதவியாளர் சேவை -1
மாகாண அரச முகாமைத் துவ உதவியாளர் சேவை -2
உள்ளூராட்சி அரச முகாமைத் துவ உதவியாளர் சேவை -3
(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் இடவும் .)
பரீட்சார்த்தி பரீட்சை எழுத விரும்பும் மொழி மூலம் :
சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் இடவும்)
1.0 பெயர் :-
1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர
(திரு./ திருமதி/ செல்வி)
(ஆங் கில கெப்பிட்டல் எழுத்தில் )
உதாரணம் சில்வா எம்.ஏ. :..........................................
1.2 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் ) :..............................
1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில் ) :..............................
2.0 முகவரி :
2.1 அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் ) :..............................
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில் ) :..............................
தொலைபேசி இல. :..............................
2.3 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் ) :..............................
..............................
தொலைபேசி இல. :..............................
3. 3.1 பால் : பெண் - 1, ஆண் - 0
(உரிய இலக்கத்தைப் பெட்டிக்குள் குறிப்பிடவும் .)
3.2 தேசிய அடையாள அட்டை இலக்கம் :-
3.3 பிறந்த திகதி :ஆண்
மாதம் : திகதி :
3.4 விண்ணப்ப முடிவுத் திகதியுன்று வயது :வருடங்கள் மாதங் கள் நாட்கள்
4. சேவை :
4.1 அரச முகாமைத் துவ உதவியாளர் சேவை/ மாகாண அரச முகாமைத் துவ உதவியாளர் சேவை/ உள்ளூராட்சி அரச முகாமைத் துவஉதவியாளர் சேவை (அவசியமற்றவற்றை கீறி விடவும் )
:..............................
4.2 அரசாங்க சேவை/ மாகாண அரச சேவை/ உள்ளூராட்சி அரச சேவை முதல் நியமனத் திகதி மற்றும் சேவையில் சேர்ந்த மொழி :
(அவசியமற் றவற் றை கீ றி விடவும் .)
5. 5.1 சிவில் அந்தஸ்து ? :திருமணமானவர் -2 / திருமணமாகாதவர் - 1
(உரிய இலக்கத்தைப் பெட்டிக்குள் இடவும் .)
5.2 திருமணமானவராயின் பிள்ளைகளின் எண்ணிக்கை, அவர் களின் பிறந்த திகதி மற்றும் வயது :..............................
6. வாழ்க்கைத் துணை தொழில் புரிபவராயின் விபரம் தரவும் :..............................
7. கல்வித் தகைமைகள் : (மொழி மூல விபரத்துடன் ) :..............................
8. உயர்வு பெற்ற திகதி :- 8.1 வகுப்பு II :..............................
வகுப்பு II இல் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சைபூர்த்தி செய்த திகதி :.............................. 8.2 வகுப் பு I :..............................
8.3 விண்ணப்பதாரர் தற்பொழுது சேவையில் இருக்கும் வகுப்பு மற்றும் அதற்கு நியமனம் பெற்ற திகதி :..............................
9. தற்போதைய வருடாந்த சம்பளம் :..............................
10. அனுபவ அறிவு : (வருடங்கள் குறிப்பிடுக.) :..............................
10.1 கணக்கீடு :..............................
10.2 தாபன விதிமுறைகள் :..............11. மொழித் தேர்ச்சி :..............
(அ) சிங்கள மொழி (ஆ) தமிழ் மொழி
(இ) ஆங்கில மொழி (ஈ) வேறுபிற நாட்டு மொழி
வாசிப்பு எழுத்து பேச்சு
12. திறமை :
12.1 தட்டெழுத்து (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் ) :..............................
12.2 கணனி அறிவு (விபரம் தரவும் ) :-----.
13. விண்ணப்பதாரர் இலங்கை வெளிநாட்டு தூதரகங்களில் முன்னர் சேவையாற்றியிருந்தால் திகதிகளுடன் தூதரகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
14. பிறதகைமைகள் ஏதும் :..............................
பரீட்சைக்கான கட்டணம் மாவட்ட/ பிரதேச செயலகத்தில் செலுத் தப்பட்டபோது வழங்கப் பட்ட பற்றுச்சீட்டு கீழே உள்ள கூட்டிற்குள் ஒட்டப் பட வேண் டும் (பற்றுச் சீட்டின்படப் பிரதியொன்றை வைத்திருக்கவும் .) :
1. பற்றுச் சீட்டு இலக்கம் :..............................
2. மாவட்ட/ பிரதேச செயலகம் :..............................
3. திகதி :..............................
4. தொகை :..............................
15. விண்ணப்பதாரரின் உறுதியுரை :..............................
ஆந் திகதிக்கு முற்பட்ட ஐந்து வருட
காலத் திற் கானசகல சம்பள ஏற் றங் களையும்
பெற்றுள்ளேன் என்றும்
எச்சரிக்கை தவிர்ந்த எதுவித ஒழுக்காற்று தண்டனையையும் பெறவில்லை என்றும் , இத்தால் உறுதிமொழிகின்றேன் . அத்துடன் எனது அறிவுக் கெட்டிய வரையில் இவ் விண்ணப்பத்தில் கொடுக்கப் பட்டுள் ள விபரங்கள்யாவும் உண் மையானவையும் சரியானவை எனவும் உறுதி மொழிகின்றேன் . கொடுக்கப்பட்டுள்ள தகவல் ஏதாவது பரீட்சைக் குமுன்போ, பரீட்சையின் போதோ அல்லது பின்போ தவறானது எனக் காணப் படுமிடத் து எனது விண்ணப்பத்தை அல்லது நியமனத்தை இரத்துச் செய்யும் அதிகாரம் வெளிவிவகார அமைச்சு செயலாளருக்கு உண்டு என் பதையும் நான் அறிவேன். பரீட்சையைக் கட்டுப்படுத்துவதான விதிகளுக் கமைய நான் நடப்பேனென்றும் மற்றும் இப் பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக் கமைய நான்தகுதியற்றவராகக் காணப்படுமிடத்து பரீட்சைக் கு முன்போ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின்பின்போ என விண்ணப்பதாரத்துவத்தை நிராகரிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்படக் கூடு மென்பதற்கும்நான் இணங்குகின்றேன் . மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கும் தீர்மானங்களுக் கும் அமைந்து ஒழுகுவேன் என் பதையும் வெளிப்படுத்துகின்றேன் .
திகதி :..............
..............................
விண்ணப்பதாரரின் கையொப்பம் .



# இலங்கையில் சகலருக்கும் கல்வி

கல்வியில் 2015 ஆம் ஆண்டளவில் சகலருக்கும் அடிப்படைக் கல்வி என்பதை அடைந்து கொள்வதே இலங்கை அரசின் பிரதான நோக்காக உள்ளது.

1990ஆம் ஆண்டில் தாய்லாந்தில் உள்ள ஜோம்தியனில் ஆறு பரிமாணங்கள் இனங்காணப்பட்ட துடன் செனகலில் உள்ள டாகர் இல் 2000 இல் இடம்பெற்ற உலகக் கல்வி பேரவையில் இலக்குகளும் உருவாக்கப்பட்டன. 2015 இல் சகலருக்கும் கல்வியை அடையும் நிகழ்ச்சித் திட்டம் இதில் முக்கிய இடம் பெறுவதுடன் சகல சர்வதேச தரப்பினர்களினை ஒருங்கிணைத்தல் மற்றும் உலகளாவிய இயங்குதன்மையை பேணுவதற்கும் யுனெஸ்கோ பொறுப்பாக உள்ளது.

சகலருக்கும் கல்வி என்ற திட்டம் ஆறு இலக்குகளைக் கொண்டுள்ளது.

2015 ஆம் ஆண்டளவில் சகலருக்கும் கல்வியின் இலக்குகளை அடைவதே இலங்கையில் யுனெஸ்கோவினை உதவியளிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களின் பிரதான குறியிலக்குகளில் ஒன்றாக உள்ளது.



இலங்கை அரசாங்கம் இவ்வுலக மகாநாடுகளில் பங்குபற்றியதுடன் சகலருக்கும் கல்வியின் இலக்குகளின் அடிப்படைகளை ஏற்றுக்கொண்டதுடன் அவற்றை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளையும் பூரண அர்ப்பணிப்புடன் முன்னெடுத்து வருகி[illegible] 2015 யில் சகலருக்கும் கல்வி இலக்குகளை அ[illegible] கொள்வதற்கு மூன்று கட்டங்களில் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இலங்கை திட்டமிட்டுள்ளது.

எழுத்தறிவு வீதத்தில் 92.5மூ த்தினைக் கொண்டுள்ள இலங்கை தென்னாசியா நாடுகளில் இரண்டாம் இடத்தை வகிப்பதுடன் 2015 யில் 100மூ எழுத்தறிவு மட்டத்தினை அடைந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். சகலருக்கும் கல்வி இலக்குகளை அடைவதற்கும் தரமான கல்வியினை மேம்படுத்துவதற்கும் தொடர்புடைய துறைகளில் கணிப்பீடு மற்றும் கண்காணித்தலை கால ஒழுங்கில் மேற்கொள்வது முக்கியமாகவுள்ளது.

சமாதானமான ஐக்கியம், சுகாதாரம், சூழல், பொருளாதாரம், சமூக எழுவினாக்கள் பற்றிய விழிப்புணர்வுக் கான பொருத்தமான விழுமியங்கள் மனப்பாங்குகள், நடத்தைகளில் உள்ள திறன்களை இது உள்ளடக்குகின்றது. இத்தகைய வாழ்க்கைத் திறன்கள் மக்க ளின் மனங்களை மாற்றி அமைப்பதுடன் பாதுகாப்பான சுகாதாரமான மேலும் செல்வம் பொருந்திய உலகினை உருவாக்குவதற்கு இட்டுச் செல்வதுடன் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தவும் செய்கிறது.

சமாதானம் நிலையான அபிவிருத்திக் கான கல்வி, தற்போதைய பயங்கரவாதச் சூழல், புவி வெப்பமடைதல், காலநிலை மாற்றம் ஆகியவற்றை குறிப்பாக உள்ள டக்கிய வகையில் ஒரு பூகோள முயற்சி யொன்றாக விளங்குதல் வேண்டும்.

கல்வி அமைச்சினால் 2008 மார்ச் மாதம் சமூக ஐக்கியம் சமாதானத்திற்கான கல்வி தொடர்பான செயற்பாடுகளின் விரிவான பணிச்சட்டகமும் ஒரு தேசிய கொள்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகங்களின் பீடங்கள், தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவகம், மாகாண மற்றும் வலய கல்விப் பணிமனைகள், தேசிய கல்வியற் கல்லூரிகள், தேசிய பாடசாலைகள், யுனெஸ்கோ, உலக வங்கி ஆகியவற்றின் பங்களிப்புடன் மிஹிணு இன் உதவியுடன் இது தயாரிக்கப்பட்டுள்ளது.

சகல தரப்பினரும் உள்ளடங்கும் வகையிலும் சமுதாயங்களையும் உள்ள டக்கிய வகையிலும் பாடசாலைகளுக் கப்பால் இவ் எண்ணக் கருக்களை முன்னெடுப்பதன் ஊடாக, சமாதானம், நிலையான

அபிவிருத்திக்கான கல்வியை கண்காணிக்கவும் அமுலாக்கவும் தேசிய அளவிலான முயற்சியொன்றை முன்னெ டுக்க திட்டமிடப்பட்டுள்ளது. சமாதானம், நிலையான அபிவிருத்திக்கான இந்த தேசிய

**இலங்கையின் கல்வி வளர்ச்சியில் ஒரு காலத்தில் வடபகுதி முன்னணி வகித்தது யாழ்ப்பாணத்தின் கல்விமான்கள் நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் பெரும் பங்காற்றியுள்ளனர். ஆனால் நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர். யுத்தத்தின் காரணமாக வடபகுதியில் நிலவிய இயல்பின்மை கல்வியில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.**

நடவடிக்கைத் திட்டங்கள் ஜனாதிபதி தலைமையின் கீழ் உள்ள தேசிய நிலை யான அபிவிருத்தி சபையின் உத்தேச திட்டமொன்றின் பகுதியொன்றாக அமுலாக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஆங்கில ஆசிரிய பயிற்சி**

இணைப்பு மொழி என்ற வகையில் ஆங்கில மொழியை மேம்படுத்துவதற் காக வேண்டி இலங்கை தேசிய ஆணைக்குழுவானது சமாதான செயலொழுக்க ஒருங்கிணைப்பதற்கான செயலகத்துடன் இணைந்தும், ஐ. அமெரிக்க தூதுவராலயம், இடைப் பகைபாட்டுக் கல்வி மற்றும் விருத்திக் கான ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழக நிறுவனத்தில் ஆங்கில மொழி நிகழ்ச்சித் திட்டம், ஆங்[illegible] மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான



ஜனாதிபதி பணிப்புரை ஆகியவற்றின் பங்குடமையுடன், அதிசிறப்பான நகர நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு வட மத்திய மாகாணங்களில் உள்ள பாடசாலைகளுக்கு ஆங்கில ஆசிரியர் பயிற்சிகளை வழங்குகின்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பில் இருந்து தலா 10 பேர்களும் அனுராதபுரம், பொலனறுவை மாவட் டங்களில் இருந்து தலா 5 பேர்களும் தேர்வு செய்யப் பட்டு ஒரு பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் கல்வி அமைச்சு ஊடகம் மற்றும் தகவல் தொடர்பு ஆசிரிய பயிலுநர்களுக்கும் கலைத்திட்ட விருத்தியாளர்களுக்கும் இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஆரம்பிக் கக் கூடிய தக்க தருணம் இதுவே என நம்புகிறது. ஊடகம் மற்றும் தகவல் நாட்டின் அபிவிருத்தியில் பிரதான வகிபங்கை ஆற்றுகின்றன.



ஆசிரியர்கள், ஆசிரிய கல்வியாளர் கள், கல்வித் துறைவாண்மையாளர்கள் என்ற வகையில் முறைசார் கல்வித் துறையில் குறிப்பாக பாடசாலைகள் மற்றும் வகுப்பறைகளில் எவ்வாறு கருத்துச் சுதந்திர எண்ணக் கருவையும் தகவல்களை பெறுவதையும் எவ்வாறு அமுலாக்க முடியும் என சிந்திக்க வேண்டியுள்ளது. அறிவைப் பெறுவ தானது அபிவிருத்தி அடைந்த, அபிவி ருத்தி அடைந்து வரும், அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்கு இடையில் நாடொன்றின் புலக் காட்சியை வித்தியாசப்படுத்துவதாக உள்ளது. ஆகவே, ஊடகம் தகவல் எழுத்தறிவு ஓர் ஆசிரியருடன் ஓர் ஊடக விடயத்துடன் மட்டுப்படுத்தப்படாமல் இருத்தல் வேண்டும். ஏனெனில் ஊடகம் விஞ்ஞானம், பண்பாடு, கணிதம், சமூகக் கல்வி, உயிரியல் போன்ற எப்பாடங்க ளாலும் அவற்றை கடந்த வகையில் சகலவற்றையும் அது உள்ளடக்குகின்றது. இதன் பரந்து பட்ட தன்மையின் காரணமாக பாடசாலை, வகுப்பறைகளது விருத்திகள் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்பட சகல மக்களுக்கும் அடைய வேண்டும். இதனால், இவர்கள் சரியான தகவலை இலகுவாகப் பெறக் கூடியதாயிருக்கும்.

அத்துடன் சரியான தகவல்களை பயன்படுத்தி அவர்கள் வழிப்படுத்தப் படல் வேண்டும். குழந்தைப் பருவத்திலும் கூட இத்தகைய திறன்களை இவர்கள் விருத்தி செய்ய முடியும். ஏனைய விடயங்களில் நாளாந்த கற்றல் செயன்முறைகளில் இது 4ஸி பிரச்சினையாக இருக்கப் போவதில்லை.

மாணவர்கள் அறிக்கையிடல் விளம்பரப்படுத்தல், திரைப்பட ஆக்கம், வீடியோ எடுத்தலில் திறன்களை வளர்ப்பார்களாயின் ஊடகத்தை அவர்கள் ஆக்கபூர்வமான துறைக்குக் கொண்டு வருவதுடன் அவர்கள் வளர்ந்ததுடன் அதில் வேலை வாய்ப்பும் பெறக்கூடியதாயிருக்கும்.

**உயர் கல்வி**

உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களுக்கு வழங்கக்கூடிய பூகோள எண்ணக் கருக்கள், கொள்கை, ஆலோசனை, .இயலளவு கட்டியெழுப்பல், பூகோள புள்ளியியலும் தகவலும், சிறந்த நடைமுறைகள் தரமான தன்னம்பிக்கையை வெளிப்படுத்தும் வழிவகைகள், முகவர்கள், உயர் கல்வித் தகைமைகளுக்கான அங்கீகரிப்பு, எல்லை கடந்த கல்வி, திறந்த கல்வி ஆகியவற்றை வழங்குகின்றது. மேற்கூறப்பட்ட துறைகளில் யுனெஸ்கோவின் தேர்ச்சிகளைப் பயன்படுத்துவதில் இலங்கை அரசு மிகுந்த கரிசனை கொண்டுள்ளது.

சகலருக்கும் தரமான கல்வியை மேம்படுத்துவதற்காக யுனெஸ்கோ மற்றும் அபிவிருத்தி முகவர்களுடன் ஒன்றிணைந்து இலங்கை அரசின் கல்வி அமைச்சு பல முயற்சிகளை மேற் கொண்டுள்ள கொள்கைகள் அமுலாக் கப்பட்டுள்ள காட்சி அடிப்படையிலானதும் கருத்துரைக்கக் கூடியனவாகவும் உள்ளன. எனினும் சேவையளிப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்து வதற்கான சவால் காணப்படுவது டன் காலம் வரும்போது மக்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் இம்முயற்சிகள் அமைய வேண்டும். சகல துறைகளிலும் தரமான கல்வியளித்தல் மற்றும் கல்வி விநியோகத்தை அளித்தல் உலகின் சகல நாடுகளிலும் உண்மையிலேயே ஒரு பயமுறுத்தும் பணியாக காணப் படுகின்றது. எதிர்கால சந்ததியினருக்காக அமைக்கப்படும் இச்சிறந்த நடவடிக்கைகள் கல்வி நிருவாகிகள் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், அரசு, அபிவிருத்தி முகவர்கள், சமுதாயங்கள், பொது தனியார் துறையினர் என சகல தரப்பினரது அர்ப்பணிப்பான கூட்டு முயற்சியுடன் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

இலங்கையின் கல்வி வளர்ச்சியில் ஒரு காலத்தில் வடபகுதி முன்னணி வகித்தது யாழ்ப்பாணத்தின் கல்விமான்கள் நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் பெரும் பங்காற்றியுள்ளனர். ஆனால் நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர். யுத்தத்தின் காரணமாக வடபகுதியில் நிலவிய இயல்பின்மை கல்வியில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் வடபகுதியின் கல்வி நிலையானது பின்னோக்கியுள்ளது. இதனை நாம் மாற்றியமைக்க வேண்டும் அப்போதுதான் நாட்டின் பிற பகுதிகளுக்குச் சமாந்தரமான நிலையை எட்டமுடியும் இதற்கு தனியான விசேட திட்டங்கள் அவசியம்.

இதேவேளை வடபகுதியிலுள்ள வளப்பகிர்வை சரியான முறையில் பகிர்ந்தளிக்க வேண்டிய தேவையுள்ளதுடன் தற்பொழுது சில பகுதிகளில் போதிய வளமும் சில பிரதேசங்களில் குறைவளமும் உள்ளன. இதுவும் மாற்றியமைக்க வேண்டும். அவ்வாறு செய்யும் போதே ஏனைய பிரதேசங்களில் நிலவுகின்ற கல்விச்சமமின்மை சீரமைக்கப்படும். ஆகவே இதற்கும் உரிய கவனங்கள் செலுத்தப்படவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமே நிறைவான கல்வித்தரத்தினை நாம் உறுதியாக்க முடியும்.

இதேவேளை தற்பொழுது நாம் மேற்கொண்டுவரும் விசேட கவனத்தின் பாற்பட்ட கல்வி அவிபிருத்தியின் பயனை நாம் பெறுவதற்கு இன்னும் பத்து ஆண்டுகள் செல்லவேண்டும். அதன்பிறகே இன்றைய இளைய தலைமுறையின் ஆற்றல் வெளிப்பாட்டை நாம் பெற்றுக்கொள்ள முடியும் ■



# யாழில் காந்தி சிலை உடைப்பு: சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

யாழ்.அரியாலைப் பகுதியில் காந்தி சிலை உடைப்பு சம்பவம் தொடர்பில் கைதான சந்தேக நபர்களை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

விளையாட்டாகவே காந்தி சிலையை உடைத்தேன் என யாழில் காந்திசிலை உடைப்புடன் தொடர்புடைய சந்தேகநபர்களில் ஒருவர் பொலிஸாருக்கு கொடுத்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலை மகாத்மா காந்தி சனசமூக நிலையத்திற்கு முன்னால் உள்ள மகாத்மா காந்தி சிலை உடைக்கப்பட்டமை தொடர்பாக இரு சந்தேக நபர்களைப் பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் இருவரும் நேற்றுத் திங்கட்கிழமை யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

அவர்களை அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

சனிக்கிழமை இரவு காந்தி சிலை உ்டைப்புச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸார் அப்பகுதியில் தேடுதல் வேட்டையை மேற்கொண்டு இருந்தனர்.

இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் அரியாலையைச் சேந்த இரு இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## கொழும்பு மாநகர சபை:

# எதிர்க்கட்சியினர் செங்கோலை தூக்கிச் சென்றதால் பரபரப்பு

கொழும்பு மாநகர சபையின் செங்கோலை எதிர்கட்சி உறுப்பினர்கள் கைப்பற்றியதன் காரணமாக மாநகர சபையில் பதற்ற நிலை ஏற்பட்டது. இதனால் சபையின் நேற்யைய அமர்வு இடை நிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியினருடன் சமத்துவமான இணக்கப்பாடொன்றுக்கு மேயர் வரும்வரை செங்கோலை கொண்டுசெல்ல எதிர்க்கட்சியினர் மாட்டார்கள் என சபையின் ஐ.ம.சு.கூட்டமைப்பு உறுப்பினர் றிஸா ஸரூக் குறிப்பிட்டார்.

160 மில்லியன் ரூபா பெறுமதியான பவுஸர்களை வழங்கிய மைக்காக பாதுகாப்பு செயலாளருக்கு நன்றி தெரிவிப்பதற்கு நாம் முன்வைத்த யோசனையை ஏற்றுககொள்ள அவர் மறுத்துள்ளார் எனவும்,

சபை அமர்வில் இவ்விடயத்தை நாம் முன்வைத்த போது மேயர் சர்வாதிகாரமாக எமது கோரிக்கையை நிராகரித்தார் எனவும் குறிப்பிட்ட எதிர்க்கட்சியினர் தமக்கு நியாம் கிடைக்க வேண்டுமென்றும் கூறினர்.

# இலங்கைக் கடற்படையினர் கல்வீசி தாக்குதல் நடத்தினராம்

## தமிழக மீனவர்கள் குற்றச்சாட்டு

நடுகடலில் மீன்பிடித்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கல் வீசித் தாக்குதல் நடத்தி, விரட்டியத்ததாக இந்திய மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த 28ஆம் திகதி சுமார் 700 விசைப் படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர்.

இவர்கள் நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு 8 சிறிய ரக போர்க் கப்பல்களில் ரோந்து வந்த இலங்கை கடற்படையினர், மீனவர்கள் மீது கல் வீசித் தாக்கி விரட்டினர்.

அப்போது படகில் இருந்த மீனவர்கள் ஓடி படகினுள் மறைந்து கொண்டதால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இதனையடுத்து மீனவர்கள் மீன் பிடிக்க முடியாமல் கரை நோக்கித் திரும்பினர் என இந்திய மீனவர்கள் கூறியதாக தமிழ் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# நல்லூரில் மேலதிக பொலிஸார் கடமையில்

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தில் தற்போது நூறு பொலிஸார் நாளாந்தம் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். 2ஆம் திகதி மஞ்சத் திருவிழாதைத் தொடர்ந்து மேலும் நூற்று ஐம்பது பொலிஸார் கடமையில் இணைக்கப்படவுள்ளனர்.

சிறப்பு உற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியவர்களின் நன்மை கருதியே இம்மேலதிக பொலிஸார் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

# 1வது பிறந்த தின வாழ்த்துக்கள்

தெல்லிப்பழை வித்தகபுரத்தைச் சேர்ந்த திரு.திருமதி யதீஸ் குமார் அஜந்தினி தம்பதியினரின் செல்வப் புதல்வன்

## ய. யதுநாத்

தனது முதலாவது பிறந்த தினத்தை வித்தகபுரத்திலுள்ள தனது இல்லத்தில் 31.07.2012 செவ்வாய்க்கிழமை அன்று வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்



இவரை பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அம்மா, அப்பா, அம்மம்மா, தாத்தா, அமிர்தா பெரியம்மா, கண்ணாமாமா, அச்சி பெரியம்மா, நேசன் பெரியப்பா, பூஜா அக்கா, நிஷா சித்தி, மோகன் சித்தப்பா, கர்ஷி, பிரியா சித்தி, தனுஷன் சித்தப்பா, அப்பப்பா, குமார் சித்தப்பா, கிரீசன் மாமா, ஜெயம் மாமி, நந்தன் சித்தப்பா, யோகம்மா, கண்ணன் மாமா, சது மச்சான், சச்சின் மச்சான்

# கோடாரி வெட்டு

(வலிகாமம்)

கடந்தவாரம் சபாபதிப் பிள்ளை முகாமில் இரு குழுவினருக்கு இடையே குடிநீர் பெறுவது சம்பந்தமாக இடம்பெற்ற வாய்த் தர்க்கம் கோடாரி வெட்டில் முடிவடைந்த நிலையில் குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் நான்கு பேர் சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்நால்வரையும் விளக்க மறியவில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சுன்னாகத்தில் கைகலப்பு: வீடு தீக்கிரை, உடமைகள் நாசம்

(வலிகாமம்)

அயலவர்கள் இருவரிடையே குடிபோதையில் ஏற்பட்ட சண்டையினால் ஒரு வீட்டு உடமைகள் தீயிடப்பட்டதுடன் ஒருவரின் சைக்கிளும் தூக்கிக் கிணற்றுக்குள் போடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் சுன்னாகம் வடக்கு சூராவத்தைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

காலையில் இருபகுதியினரும் மிளகாய்த் தூள் கொண்டு ஒருவர் மீது ஒருவர் வீசி சண்டையிட்டுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து ஒருவருடைய சைக்கிள் அருகில் உள்ள கிணற்றில் தூக்கிப் போடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபர் வீட்டை விட்டு வெளியேறிய நிலையில் இவருடைய வீட்டிற்கு அடுத்தவர் தீயிட்டுள்ளமையால் அவருடைய உடமைகள் யாவும் எரிந்து நாசமாகியுள்ளன.

அயலவர்கள் எடுத்த முயற்சி காரணமாக தீ தொடர்ந்து பரவா வண்ணம் அணைக்கப்பட்டதுடன் கிராம அலுவலருக்கும் இதுபற்றி முறையிட்டுள்ளார்கள்.

# புகைத்தல் தின சித்திரப் போட்டி முடிவுகள்

(மாவிட்டபுரம்)

உலக புகைத்தல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பாடசாலைகளுக்கும் இடையில் மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு குழுவினால் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் பின்வரும் பாடசாலை மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். அவர்கள் விபரம் வருமாறு:

முதலாம் இடத்தினை விக்கினேஸ்வரன் நயனன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாமிடத்தினை அம்பிகாபதி தனேந்திரன் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), மூன்றாமிடத்தினை ரோமியோ பார்த்தீபன் (யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

மேலும் சிறப்புப் பரிசினைப் பெற்ற 50 பேருக்கு சான்றிதழ் களும் வழங்கப்படவுள்ளன.

# எங்கட அப்பா எங்கே?

*(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

புருஷனும் இல்லாத நிலையில நாங்களும் சோர்ந்து இருந்திட்டால், பிள்ளைகளின் நிலை என்னாகும். ஆரம்பத்தில் ஒன்றும் புரியாமல்தான் முழித்துக் கொண்டிருந்தேன். சுயதொழில் ஆரம்பிப்பது தொடர்பாக தனியார் நிறுவனமொன்று நடத்திய விழிப்புணர்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டதன் பிறகுதான் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டது. இந்தத் தொழிலைத் தொடங்கினேன்" மல்லிகாவின் குரலில் நம்பிக்கையின் மற்றுமொரு பரிமாணத்தைக் காணமுடிகின்றது.

கிழக்கில் போரினால் விதவைகளான 49,000 பெண்களும் இவ்வாறே தன்னிறைவான பொருளாதார ஸ்திரமான நிலையில் வாழுகின்றார்கள் என்ற நிலைப்பாட்டுக்கு வந்துவிட முடியாத போதும், இவ்வாறான பெண்களைச் சந்திக்கக் கூடியதாக இருப்பது ஆறுதல் தருகிறது. தனதும், தனது குடும்பத்தினதும் எதிர்கால விடிவுக்கான ஒரு வழியைத் தேர்ந்தெடுக்கக் கூடிய நிலைமைகள் அங்கு காணப்படுகின்றன.

வடக்கில் முற்றிலும் மாற்றமான சூழ்நிலையே காணப்படுகின்றது. இறுதிப் போரின் அவலங்களிலிருந்தே அவர்கள் இன்னும் மீளாதுள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் சில பிரதேசங்களில் மிக மந்த நிலையிலும், சில பிரதேசங்களில் முற்றாக இல்லாத நிலையிலும் காணப்படுகின்றது.

நன்றி : இணையம்,
ஸர்மிளா ஸெய்யித்

# இன்றைய இராசி பலன் (31.07.2012)

**நந்தன வருடம் ஆடித் திங்கள் 16 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**நட்சத்திரம்** : பூராடம் பின்னரவு 12.04 வரை அதன் பின் உத்தராடம்
**திதி** : திரயோதசி பிற்பகல் 12.45 வரை அதன்பின் சதுர்த்தசி
**சுபநேரம்** : 10.33 - 12.03
**இராகுகாலம்** : 3.03 - 4.33
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்** : பொருள் வரவு, அந்நியர் உதவி, முயற்சி வெற்றி
**இடபம்** : காரிய நஷ்டம், மனக்குழப்பம், உடல்நலம் பாதிப்பு
**மிதுனம்** : பொருள்வரவு, நண்பர் உதவி, சுபகாரியம்
**கடகம்** : ரோகபீடை, சத்துருபயம், பொருள் கஷ்டம்
**சிங்கம்** : பணவரவு, மனமகிழ்ச்சி, புத்திரரால் சுகம்
**கன்னி** : வாகன சுகக்குறைவு, உடல்நலம் பாதிப்பு, குடும்பச் சச்சரவு
**துலாம்** : வீண்முயற்சி, சிறுதூரப் பிரயாணம், சகோதரப் பிரச்சினை
**விருச்சிகம்** : தொழில் இலாபம், குடும்ப நன்மை, போசன சுகம்
**தனுசு** : வீண் வாக்குவாதம், தேகநலம் பாதிப்பு, கடன்தொல்லை
**மகரம்** : அமைதியின்மை, பொருட்செலவு, போக்குவரத்தில் வசதியின்மை
**கும்பம்** : தொழில்விருத்தி, புதுவரவு, மனமகிழ்ச்சி
**மீனம்** : இடமாற்றம், போசனசுகக் குறைவு, தொழில் பிரச்சினை

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# ஆயுர்வேதமும் வாத நோய்களும்

ஆயுர்வேதத்தின் அடிப்படை மூன்று தோஷ தத்துவம். இந்த மூன்று தோஷங்கள் ஏறுமாறானால் நோய்கள் உண்டாகுகின்றன. ஆர்த்தரைடீஸ் ஆயுர்வேதத்தில் வாய்வு (வாத தோஷம்) அதிகமானால் ஏற்படும் கோளாறாக கருதப்படுகிறது. மேலும் சில காரணங்களாக ஆயுர்வேதம் சொல்வது - அளவுக்கு மீறி உடற்பயிற்சி செய்வது, இரத்தப் போக்கு, அதிக பாலியல் உறவினால் ஏற்படும் இழப்பு, இரவு அதிக நேரம் கண் விழித்தல், இயற்கை வேகங்களை தடை செய்தல், கவலை, எலும்பு முறிவு, மழைக்கால குளிர்காற்று முதலியன. இந்த காரணங்களுடன் அஜீரணமும் மலச்சிக்கலும் சேர்ந்து "ஆமா" எனும் கழிவுப்பொருள் உடலை விட்டு நீக்க முடியாமல் போனால், அதன் விளைவுகளால் உண்டாகும் மூட்டு வலியை ஆயுர்வேதம் "ஆமவாதம்" என்கிறது. ஆமவாதம் என்பது ருமாடிஸத்தை குறிக்கும்.

ஆயுர்வேதம் உடலின் மூட்டுக்கள் "கப"த்தின் இருப்பிடம் என்கிறது. இங்கு வாதத்தின் தன்மை அதிகரித்தால் கபத்தின் வழவழப்பு உண்டாக்கும் எண்ணை பசை குறைந்து தேய்மானம் ஏற்படும். கூடவே வலி ஏற்படும். சில சமயங்களில் "பித்தம்" அதிகமானால் "வாத ரக்தா" ஏற்படும்.

ஆயுர்வேத சிகிச்சை முறை விரிவாக பல விதமாக செயல்படுகிறது. வெளிப்பூச்சு மருந்துகள், மசாஜ் இவற்றால் வலியை குறைத்து, மூட்டுக்கள் மீண்டும் இயங்கு மாறு செய்யப்படும். பிறகு மலச்சிக்கலை போக்க தேவையான முறைகள் கையாளப்படும்.


உணவு முறைகள், உடல் பயிற்சிகள் (யோகா) மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்களும் பரிந்துரைக்கப்படும்.
உள்ளுக்கு கொடுக்க, மகாராஜ குக்குலு போன்ற பல மருந்துகளும், மஹா நாராயண தைலம் போன்ற பல வெளிப்பூச்சு தைலங்களும் ஆயுர்வேதத்தில் இருக்கின்றன.

அந்தந்த பிரக்ருதி, மூட்டு வியாதிகளுக்கு ஏற்றவாறு முழுமையான சிகிச்சையை ஆயுர்வேதம் தரும்.

# மூட்டுவலி, வயதானவர்கள் மற்றும் பெண்களை அதிகமாகத் தாக்கும்

குளிர்காலத்தில் வயதானவர்கள், பெண்களை அதிகம் பாதிப்பது மூட்டு வலி. அதிக எடை, கல்சியம் குறைபாடு, மெனோபாஸ் என பல காரணங்கள் இருந்தாலும் பனி காலத்தில் கால் வலி, எலும்பு சார்ந்த வலிகள் வழக்கத்தை விட அதிகம் இருக்கும்.

பனிக் காலத்தில் ஏற்படும் மூட்டு வலியை சமாளிப்பது குறித்து விளக்கம் அளிக்கிறார் பிசியோதெரபிஸ்ட் கார்த்திகேயன்.




உடலின் எலும்புகளை இணைப்பது மூட்டுகள். நடப்பது, ஓடுவது, விளையாடுவது என உடல் இயக்கத்தை எளிதாக்கும் வேலையை மூட்டுகள் செய்கின்றன. மூட்டு நாண்களை அளவுக்கு அதிகமாக உபயோகித்தல் மற்றும் கிழிந்து போவதால் மூட்டு நாண் பிடிப்புகள் ஏற்பட்டு வலியை ஏற்படுத்துகிறது. முழங்கால் மூட்டு மற்றும் பாதத்திலும் இது போன்ற பிரச்னை ஏற்படலாம். மூட்டுப்பை அலர்ஜி ஏற்படும் போதும் மூட்டுப் பகுதிகளில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எலும்பு, தசைநாண் மற்றும் தசை ஆகியவை மூட்டுகளுடன் இணையும் பகுதியில் அமைந்துள்ளது. மூட்டுகளின் அசைவால் ஏற்படும் அதிர்வுகளில் இருந்து காக்கும் வேலையை மூட்டுப்பைகள் செய்கின்றன. மூட்டுப் பைகளில் அலர்ஜி ஏற்படுவதால் அசைவு மற்றும் அழுத்தத்தின் போது வலி ஏற்படும். தோள்பட்டை, முழங்கை, இடுப்பு மூட்டுகளில் இந்த அலர்ஜி அதிகளவில் ஏற்படும்.

தசை நார்களில் உண்டாகும் அலர்ஜி காரணமாகவும் மூட்டுகளில் வலி, பிடிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இந்த வலியை துவக்கத்தில் கவனிக்காமல் விட்டால் 3 மாதங்களுக்கு பின்னர் உடல் முழுவதும் வலி ஏற்படலாம். கால்களில் தசைப்பிடிப்பு, தசைகள் எலும்புகளுடன் இணையும் பகுதிகளில் தொடு வலி, தலைவலி மற்றும் இடுப்பு வலியும் ஏற்பட வாய்ப்புள்ளது. மன அழுத்தம் மற்றும் உடல் அழுத்தம் அதிகம் உள்ளவர்களுக்கு இந்நோய் அதிகளவில் வருகிறது. ஆண்களைவிட பெண்களையே அதிகம் தாக்குகிறது. இவர்கள் அதிக பதற்றத்தை விட்டு வேலைகளை நிதானமாக செய்யலாம்.

ஒரே வேலையை திரும்பத் திரும்ப செய்வதை தவிர்க்கலாம். சைக்கிள் ஓட்டுதல், நீந்துதல் போன்ற பயிற்சிகளில் ஏதாவது ஒன்றை பின்பற்றலாம். வயிற்று தசைகளுக்கு அவ்வப்போது பயிற்சி கொடுக்கலாம். வலிக்காக அன்றாட வேலைகளை முற்றிலும் தவிர்ப்பதும் தவறானதே.

மூட்டுப் பிறழ்வு, மூட்டு நழுவுதல் போன்ற காரணங்களால் முழங்கை, முன்கை பகுதியில் கடும் வலி ஏற்படும். திடீரென முழங்கையை நீட்டும் போதும் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. முழங்கைப்பகுதி ஒழுங்கற்றுக் காணப்படுவது மற்றும் அதிக வலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனே டாக்டரை அணுக வேண்டும். குளிர் காலத்தில் மணிக்கட்டு, கை விரல்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. மணிக்கட்டு, விரல்களுக்கு அதிகம் வேலை கொடுப்பது, காயம் காரணமாக வலி ஏற்படலாம்.

சாதாரண மூட்டு பிரச்னைகூட பனிக்காலத்தில் அதிகரிக்கும். வலிகளையும் ஏற்படுத்தும். அதற்கான பாதுகாப்பு முறை மூலம் பனிக்கால மூட்டு வலியை தவிர்க்க முடியும்.

## மூட்டு வலியைக் குறைக்க..

மூட்டு வலியைக் குறைக்க மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும்.

மூட்டுகளை அழுத்தி அசைவைக் குறைக்கும் எலாஸ்டிக் கட்டு போடலாம்.

மூட்டுகளில் வலி இருக்கும்போது உடற்பயிற்சியை தவிர்க்கவும்.

ஒரே வேலையை தொடர்ந்து செய்வதை விட்டு இடையில் சிறிது ஓய்வெடுத்து பின்னர் வேலை செய்யலாம்.

அதிக எடை தூக்குவதை தவிர்க்கவும். குளிர் காலங்களில் அதிகாலை குளிரில் வெளியில் வருவதை தவிர்க்கவும்.

வெளியில் வர நேர்ந்தால் மப்ளர், காலுறை பயன்படுத்தி கால்கள். கழுத்து பகுதி கதகதப்பாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளலாம்.

குளிரால் மூட்டு வலி ஏற்பட்டால் அப்பகுதியில் சுடுநீர் ஒத்தடம் கொடுக்கலாம்.

அதிக எடையை குறைப்பதும் மூட்டுவலியை குறைக்க ஒரு வழியாகும். கல்சியம் சத்துள்ள உணவுகளை எடுத்துக் கொள்வதால் எலும்பு வலிமை அடையும்.


குளிர் காலத்தில் மூட்டுக்கான பயிற்சிகளை செய்வதன் மூலம் வலி ஏற்படுவதை தடுக்கலாம்.

# ஆரோக்கிய நாதம்

### உணவுப்பழக்கம்:

1.வாழைப்பழம் அதிகமாக உண்ண வேண்டும். காய்கறி சூப் அதிகமாக சாப்பிட வேண்டும். கரட், பீட்ரூட் போன்றவற்றை பச்சையாக சாப்பிடலாம்.

2.கல்சியம் அதிகம் உள்ள பால், பால் சார்ந்த பொருட்கள், முள் நிறைந்த மீன் போன்றவற்றை சாப்பிட வேண்டும்
தவிர்க்கவேண்டியவை: காரமான வறுத்த உணவுகள், தேநீர், காபி, பகல் தூக்கம், மனக்கவலைகள், மன அழுத்தம்.



## இளையவர்களை தாக்கும் மூட்டு வலி!

முன்பெல்லாம் வயதானவர்களை மட்டுமே பாதித்து வந்த முழங்கால் மூட்டுவலி, இப்போது இளம் வயதினரையும் வாட்டி எடுக்க ஆரம்பித்திருக்கிறது. நடப்பதற்கு சோம்பேறித்தனப் பட்டு சொகுசு கார், இருசக்கர வாகனம் போன்ற வாழ்க்கை முறை, உணவுப் பழக்கம், உடற்பயிற்சி இல்லாதது போன்றவைகள்தான் மூட்டுவலி உண்டாக பிரதான காரணங்கள். மூட்டுவலி ஏற்பட்டால் இயல்பாக நடக்க முடியாது. உட்கார்ந்து எழுவதில் சிரமம் ஏற்படும். தவிர, நாள்பட்ட மூட்டுவலியால் வேறு பல உபாதைகளும் உண்டாகும் ஆபத்து உண்டு. இவற்றை எளிதில் தவிர்க்க முடியும். அதற்கென நவீன சிகிச்சைகளும் வந்துவிட்டன!

## மூட்டுத் தேய்மானம் இரண்டு வகைப்படும்

**மூட்டழற்சி**

இது பெரும்பாலும் வயதானவர்களுக்கே வரும் இது பொதுவாக இடுப்பு மூட்டு, கால் மூட்டு, தோள்பட்டை, கழுத்து போன்ற பகுதிகளில் ,ஏற்படும்.

**முடக்குவாதம்**


இது எந்த வயதினருக்கும் வரலாம். பெரும்பாலும் விரல்கள், மணிக்கட்டு, கால் போன்ற புகுதிகளையே தாக்கும்.

## முழு உடல் பரிசோதனையின் அவசியம்

உடலின் பாகங்கள் குறித்துக் கவலைப்பட்டு, முழு உடல் பரிசோதனை செய்து கொண்டு அவற்றைச் சிறப்பாக பராமரிக்க மக்கள் தவறுவதில்லை. ஆனால் பெரும்பாலானோர் பற்கள் - ஈறுகள் குறித்துக் கவலைப்படாமல் இருப்பது வருத்தம் அளிக்கிறது.

பற்கள், ஈறுகள் குறித்து பொது மக்கள் மட்டுமின்றி மருத்துவமனைகள்கூட போதிய அக்கறை செலுத்துவதில்லை. மாஸ்டர் செக் - அப் என முழு உடல் பரிசோதனை வசதிகளை வைத்துள்ள பல மருத்துவமனைகள், பல் நலத்தில் உரிய கவனம் செலுத்துவதில்லை.

பல் பிடுங்குவதற்கு மட்டுமே "பல் மருத்துவம்" எனக் கருதுவது சரி அல்ல. பற்கள், ஈறுகளை முறையாகப் பராமரித்து பற்களை கடைசி வரை தக்க வைத்துக் கொள்ள உதவுவதுதான் பல் மருத்துவம்.



**இதயத்துடன் தொடர்பு:**

ரத்தத்தில் அதிக கொழுப்புச் சத்து, உயர் ரத்த அழுத்தம், உடல் பருமன் ஆகியவை குறித்து மக்கள் அதிகம் கவலைப் படுகின்றனர். ஏனெனில், இந்தப் பிரச்னைகள் இதயத்தைப் பாதித்து உயிரைப் பறித்து விடும் என்ற பயம்தான்.

ஆனால் பல்லில் பிரச்னை அல்லது ஈறு நோய் என்றால் பல் தானே என்ற அலட்சியம் பலரிடம் உள்ளது. இனி அத்தகைய அலட்சியம் வேண்டாம்.

ஏனெனில் ஈறு நோய்க்கும் இதய நோய்க்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாக ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

அதாவது, ஈறு நோய்க்கும் இதய நோய்க்கு வித்திடும் ரத்த நாளங்களின் குறுகலுக்கும் தொடர்பு இருப்பது நிரூபணமாகியுள்ளது.




குதிரைகளுக்கோவெனில், வயலில் ஒவ்வொரு அங்குலமும் தெரியும். அறுத்துக் கட்டுக் கட்டுவது பற்றி ஜோன்ஸுக்கோ அவன் ஆட்களுக்கோ தெரிந்ததைவிட அதிகமாகவே அந்த குதிரைகளுக்குத் தெரிந்திருந்தது. பன்றிகள் எந்த வேலையையும் செய்யவில்லை. ஆனால் எங்கு எந்த வேலை நடந்தாலும் அவை அங்கு நின்று வேலையை "இப்படிச் செய்ய வேண்டும், அப்படிச் செய்ய வேண்டும்" என்று மேற்பார்வை பார்த்தன.

அவற்றிற்கிருந்த மேலான அறிவைக் கொண்டு அவை இந்த மேற்பார்வை பார்க்கும் வேலையைத்தான் செய்ய முடியும். அதுதான் இயற்கை என்று மற்ற விலங்குகள் எல்லாம் நினைத்தன. அவை தலைமை தாங்கப் பிறந்த விலங்குகள்.

அந்த நாட்களில் குதிரைகளுக்குக் கடிவாளங்களோ சேணங்களோ தேவைப்படவேயில்லை. பாக்ஸரும் க்ளோவரும் தாமாகவே போய்நின்று அறுப்பு யந்திரத்தையோ, போர் போடும் யந்திரத்தையோ தாமாகவே இழுக்கும். வயலில் நேராக யந்திரத்தை இழுத்துக்கொண்டு நடக்கும். ஒரு பன்றி அவற்றின் பின் நடந்துகொண்டே, "வேகமாகப் போ தோழா!' என்று சொல்லும்.


விலங்குகளில் மிகவும் சிறியவையும் அற்பமானவையும் கூட இந்தப் புல் அறுவடை வேலையில் ஈடுபட்டுத் தங்களாலானவற்றைச் செய்தன. நாள் பூராவும் வெய்யிலில் அங்கும் இங்கும் போய் வாத்துகளும் கோழிகளும் கூட தங்கள் அலகுகளில் புல்லைக் கொத்திக் கொணர்ந்து சேர்த்து போர் போட உதவின. கடைசியில் பார்க்கும்போது ஜோன்ஸும் அவன் வேலையாட்களும் அறுவடை செய்து முடிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே விலங்குகள் புல் அறுவடையைச் செய்து முடித்துவிட்டன.

பண்ணையிலே அதுவரை கண்டிராத பெரிய அறுவடையாகவும் இருந்தது அது. ஏனென்றால் எங்கும் ஒருதுளிப் புல்லோ வைக்கோலோ வீணாகிவிடாமல் பார்த்துக் கொண்டன கோழிகளும் வாத்துக்களும். மிகச் சிறிதாயிருந்த புல்லைக் கூட அவை கொணர்ந்து சேர்த்து விட்டன. அது மட்டுமல்ல, பண்ணையிலிருந்த விலங்குகளில் எதுவும் ஒருவாய்ப் புல்லைக்கூடத் திருடித் தின்னவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தக் கோடை பூராவும் பண்ணை வேலைகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகத் தவறாமல் வரிசைக் கிரமமாக நடைபெற்றன. அந்த விலங்குகள் கற்பனையில் கூட நினைத்துப் பார்த்ததில்லை. அவ்வளவு சந்தோஷமாகத் தங்களால் வாழ்க்கை நடத்தமுடியுமென்று. ஒவ்வொரு வாய் உணவும் ஆனந்தம் தருவதாக இருந்தது அந்த விலங்குகளுக்கு.

(நாளை..)

## வரைவோம் வாருங்கள்!



## பம்பரம் விடுவோம் !



பம்பரம் பொதுவாக கொய்யா அல்லது கருவேல மரக்கட்டையைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படுகிறது. மரக்கட்டைகளை முதலில் மேல்பகுதி அகன்றும் கீழே வர வரக் குறுகியும் கூம்பு வடிவில் செதுக்க வேண்டும். பின்பு அதில் ஆணியை இணைக்க வேண்டும். பின்னர் இதன் மேல் கண் கவரும் வண்ணங்கள் தீட்டப் படுகிறது. இதைச் சுழற்ற ஒரு மீட்டர் நீளமுள்ள கயிறு பயன்படுத்தப்படுகிறது. தற்காலங்களில் உலோகம் அல்லது நெகிழிப் பொருட்களாலும் பெருமளவில் பம்பரம் தயாரிக் கப்படுகிறது.

**பம்பரம் விளையாடும் முறை:**


பம்பரக்கட்டை மற்றும் கயிறைப் பயன்படுத்தி விளையாட்டைத் துவங்க வேண்டும். இதனை ஒருவராகவோ அல்லது பலருடன் சேர்ந்தோ விளையாடலாம்.

பம்பரத்தைக் கொண்டு பல வித விளையாட்டுகள் விளையாடப்படுகின்றன. முதலில் தரையில் ஒரு வட்டமிட்டுக் கொள்ளவேண்டும், பின்பு 1, 2, 3 சொல்லி எல்லோரும் பம்பரத்தை ஒரே நேரத்தில் சுழற்ற வேண்டும். பின்பு சாட்டையை பயன்படுத்தி பம்பரக்கட்டையை மேல் எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்க முடியாதவர்களின் பம்பரங்களை வட்டத்தின் உள்ளே வைக்க வேண்டும். வெளியே உள்ளவர்கள் வட்டத்திலிருக்கும் பம்பரத்தை, தங்கள் பம்பரத்தைப் பயன்படுத்தி வெளியே எடுக்க வேண்டும். அவ்வாறு பம்பரத்தை வட்டத்தினுள் விடும் போது, பம்பரம் இல்லாதவர் அந்த பம்பரத்தை பிடித்துவிட்டால் அந்தப் பம்பரமும் வட்டத்தினுள் வந்துவிடும். சுழற்றுபவரின் பம்பரம் சுழலவில்லை எனில், அந்த பம்பரமும் வட்டத்தினுள் வைக்கப்படும்.

வட்டத்திலுள்ள அனைத்துப் பம்பரங்களும் வெளியே வந்து விட்டால் மீண்டும் ஆட்டத்தைத் துவங்க வேண்டும்.

# சிறுவர் அமுதம்

## அமெரிக்காவின் பூர்வகுடிகள்



சிவப்பு இந்தியர்கள் என அழைக்கப்படுபவர்கள்தான் அமெரிக்க நாட்டின் பூர்வீகக் குடிகள். இவர்கள் சுமார் 30,000 ஆண்டுகளுக்கு முன் வட ஆசியாவிலிருந்து கால்நடையாக கனடா, வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா வந்து சேர்ந்தார்கள். இவர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்தனர். ஒரு சமயம் சுமார் ஏழரை கோடி மக்கள் இருந்தனர் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். 2000 வகை மொழிகளில் இவர்கள் பேசினார்கள் என்றும் ஆதாரங்கள் உள்ளன.

## விடுகதைகள்




1) காற்றால் உயிர் பெறும், காதுக்கு இனிமை தரும் - அது என்ன?

2) ஊரில்லா மாநிலங்கள், தண்ணீர் இல்லா கடல்கள் - அது என்ன?

3) பகலில் உறங்குவான், இரவில் அலறுவான் -அவன் யார்?

விடைகள்: 1) புல்லாங்குழல் 2) வரைபடம் 3) ஆந்தை

## மரங்கொத்தி



மரங்கொத்திப் பறவைகள் தங்களுடைய அலகுகளினால் மரத்தைப் கொத்துவதைப் பார்த்திருப்போம். ஒரு மனிதன் ஆணியை சுவரில் அடிக்க எவ்வளவு பலத்தைப் உபயோகிப்பானோ, அவ்வளவு பலத்தை உபயோகித்து இவை மரத்தை துளையிடுகின்றன. மரங்கொத்திகள் துளையிடுவதற்கு பெரும்பாலும் பைன் மரத்தையே தேர்ந்தெடுக்கின்றன என மேலைய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். எமது நாட்டில் மரங்கொத்திகள் தென்னை, பனை மரங்களை துளையிடுவதை நாம் பார்த்திருக்கிறோம்.

## அறிந்துகொள்க

23 நொடிகள் மட்டுமே பறக்கும் திறனுடைய பறவை கோழி.

சிப்பியில் முத்து விளைய 15 ஆண்டுகள் ஆகும்.

மரங்கொத்தி பறவைகள் ஒரு விநாடிக்கு 20 முறை மரத்தைக் கொத்துகின்றன.

விலங்குகளில் மிகவும் சிறிய இதயத்தைக் கொண்டது சிங்கம்

### சுடோக்கு எண் 18 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 8 | 1 | 7 | 3 | 5 | 9 | 6 |
| 9 | 1 | 3 | 6 | 2 | 5 | 4 | 7 | 8 |
| 6 | 5 | 7 | 9 | 8 | 4 | 1 | 3 | 2 |
| 1 | 9 | 6 | 7 | 5 | 8 | 3 | 2 | 4 |
| 7 | 3 | 2 | 4 | 9 | 6 | 8 | 1 | 5 |
| 5 | 8 | 4 | 2 | 3 | 1 | 7 | 6 | 9 |
| 8 | 7 | 5 | 3 | 6 | 2 | 9 | 4 | 1 |
| 4 | 6 | 9 | 8 | 1 | 7 | 2 | 5 | 3 |
| 3 | 2 | 1 | 5 | 4 | 9 | 6 | 8 | 7 |

### சுடோக்கு எண் 19

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | 7 | | | 4 | |
| | | 6 | | | 9 | 2 | | |
| | | 4 | | 8 | 5 | | | 9 |
| | | | | | 3 | | 8 | 4 |
| | 4 | | 8 | | 1 | | 3 | |
| 7 | 3 | | 6 | | | | | |
| 3 | | | 5 | 1 | | 4 | | |
| | | 1 | 9 | | | 5 | | |
| | 8 | | | 2 | | | 1 | |

## குழந்தைகளே!

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# செல்வச்சந்நிதி உற்சவத்திற்கான முன்னேற்பாடுகள்

(வல்வெட்டித்துறை)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆலய சுற்றுசூழலில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை பேணும் வகையில் பொலிஸாருடன் இணைந்து சுகாதாரத் திணைக்களமும் நகர சபையும் பூரண ஒத்துழைப்பு வழங்கும்.

இந்த ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் ஆகஸ்ட் 17ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருப்பதையொட்டி கடந்த 23ஆம் திகதியன்று பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் முன்னேற்பாட்டுக்கான ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்றது.

இதன்போது சுகாதாரம், பாதுகாப்பு, போக்குவரத்து உள்ளிட்ட விடயங்கள் பற்றி கலந்தாலோசித்தபோதே மேற்படி ஒத்துழைப் பை வழங்கவுள்ளது சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்டது.

இம்முறை ஆலய சூழலில் கச்சான், ஐஸ்கிறீம் உட்பட உணவு கையாளும் நிலையங்கள் விற்பனை செய்யப்படும் உணவுப் பண்டங்களை தயாரிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. திருவிழா காலங்களில் டெங்கு ஒழிப்புக்கான புகையூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் சுகாதார பிரிவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு குடிநீர் விநியோகம், மற்றும் மலசல கூட வசதிகளுடன் ஆலய சுற்றுபுற சூழலை சுத்தமாக்கும் வகையிலும் நகர சபையினர் சுத்திகரிப்பு தொழிலாளர்களைக் கொண்டு செயற்படுத்தவுள்ளதாகவும், பத்தர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு வல்வெட்டித்துறை பொலிஸாரும் சென்.ஜோன்ஸ் அம்புலன் படையணி, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சாரணர் சேவை மக்கள் நலன்புரிச்சங்கம் ஆகியன இணைந்து மருத்துவசேவை, கடற்பாதுகாப்பு என்பனவற்றை வழங்குவதுடன் களவு மற்றும் நெருக்கடிகளை குறைப்பதற்கு ஈடுபடுத்தப்படவுள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்தர்களின் போக்குவரத்து சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு தனியார் மற்றும் அரச பேரூந்துக்களை தினமும் சீரானமுறையில் ஈடுபடுத்த ஆலய சூழலை அண்டிய பகுதியில் பேரூந்து தரிப்பிடத்துக்கான காணியை தெரிவு செய்துதர வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இம்முறை மகோற்சவ காலத்தில் ஏராளமான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் மேற்படியான இடையூறுகளை தவிர்க்கும் பொருட்டு திணைக்கள அதிகாரிகள் முன்வர வேண்டும் என உதவி பிரதேச செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தின் போது நகர பிதா ந. அனந்தராஜ், கலாசார உத்தியோகத்தர் செல்வ சுகுணா, வல்வெட்டித் துறை நகரசபை செயலர், ஆலய உரிமையாளர் ஆறுமுகசாமி ஐயர் சிவசண்முகம் ஐயர், சுகாதாரப் பகுதி அதிகாரிகள், வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள், பொலிஸார், மருத்துவ சேவைப் பிரிவினர் மற்றும் படையணியினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (01)

## நாளை ஆசிரியமணி ச.விநாயகரத்தினம் அவர்களின் பவளவிழா நிகழ்வு

ஆசிரியமணி ச.விநாயகரத்தினத்தின் பவளவிழா வைபவம் நாளை (புதன்கிழமை) தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக் கிறது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளரும், பவளவிழாக் குழுத் தலைவருமான கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் தலைமையில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வின்போது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் அதிபர் கு.வேல்சிவானந்தன் கௌரவ அதிதியாகக் கலந்து கொள்வார்.

யாழ்.பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கலாநிதி நா.வி.மு.நவரத்தினம் வழங்கும் இறைவணக்கப் பாடலைத் தொடர்ந்து தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான அறங்காவலர் சு.ஏழூர்நாயகம் வழங்கும் வரவேற்புரையும் விழாத் தலைவரின் தலைமையுரையும், அதன்பின் சிவஸ்ரீ மகாலிங்கக் குருக்களின் ஆசியுரையும் இடம் பெறும்.

இந்த நிகழ்வின்போது பேராசிரியர் நா.சண்முகலிங்கன், பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, பேராசிரியர் மா.வேதநாதன், பேராசிரியர் கி.விசாகரூபன், வைத்தியகலாநிதி எஸ்.சிறீபவானந்தராஜா ஆகியோர் வழங்கும் வாழ்த்துரைகளும், ச.விநாயகமூர்த்தி, கலாநிதி ஆறு. திருமுருகன், சட்டத்தரணி இ.செல்வஸ் கந்தன், சட்டத்தரணி நடராஜா காண்டீபன், சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம், ஸ்ரீமதி நாகதர்ஷினி கருணாகரன், தி.இராஜபாலன் ஆகியோர் வழங்கும் பணி நயப்புரைகளும் இடம்பெறும்.

வைபவத்தின் சிறப்பு அம்சமாக பவளவிழா நாயகருக்கு வழங்கும் கௌரவத்தை தொடர்ந்து சைவப் புலவர் சு.செல்லத்துரை, பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன், மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன் ஆகியோர் வாழ்த்துப்பாமாலையை வழங்குவார்கள்.

இதன் பின்னர் பவளவிழா நாயகரின் ஏற்புரையும் பவளவிழாக் குழு செயலாளர் சு.சயந்தன் வழங்கும் நன்றியுரையும் இடம்பெற்று, பவளவிழாக் குழு உபதலைவர் இசைக் கலாவித்தகர் சிற்றம்பலம் சிவஞானராசாவின் இறைவணக்கப் பாடலுடன் நிகழ் சிகள் நிறைவுபெறவிருக்கின்றன. (க)

## கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப்படங்கள் வைத்திருந்த நால்வர் கைது

ஆபாசப்படங்களை கையடக்கத் தொலைபேசியில் வைத்திருந்து அதனை பார்த்துக் கொண்டிருந்த வேளையில் வயதில் குறைந்த நால்வர் சுன்னாகம் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமைச் சேர்ந்த இளை ஞர்கள் நால்வரே கைது செய்யப்பட்டவர்களாகும்.

குறிப்பிட்ட முகாமில் உள்ள பொது மண்டபத்தில் மாலை வேளையில் இவர்கள் குறிப்பிட்ட ஆபாசப்படங்களை கையடக்கத் தொலைபேசியில் பார்த்துக்கொண்டு இருந்துள்ளார்கள்.

குறிப்பிட்ட நேரத்தில் ரோந்துக் கடமையில் சென்ற பொலிசாரைக் கண்டு ஆபாசப்படம் பார்த்துக் கொண்டு இருந்தவர்கள் தப்பி ஓடியுள்ளார்கள். சந்தேகம் கொண்ட பொலிஸார் பொது மண்டபத்தில் சென்று பார்த்த வேளையில் கையடக்கத் தொலைபேசி ஒன்று கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

அதனை கைப்பற்றிய பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக ஆபாசப்படம் கைத் தொலைபேசியில் வைத்து பார்த்த சம்பவம் தெரியவந்தது.

அதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் பொலிஸாரின் பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

## சர்வதேச இந்துமத குருபீடத்தின் கௌரவம்

(உடுவில்)

சர்வதேச இந்துமத குருபீடத்தினால் யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய அதிபர் செல்வி. நாகலிங்கம் ஜெயராணி விருது வழங்கி கௌரவிக்கப்படவிருக்கிறார்.

இவரின் ஆன்மீக சமூக சேவைகளைப் போற்றும் வகையிலேயே, யாழ். மாவட்டத்தில் நடக்கும் ஆன்மீகப் பெருவிழாவின்போது இவருக்கு கௌரவிப்பு பட்டமும் விருதும் வழங்கப்படவிருக்கிறது.

சர்வதேச இந்துமத குருபீடத்தின் 15வது ஆண்டு நிறைவையும், அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ காந்தா பீடத்தின் 30வது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் மூன்று நாட்கள் ஆன்மீகப் பெருவிழாவொன்று சர்வதேச இந்துமத குருபீடாதி பதி, சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி, ஆன்மீக அருள்ஜோதி கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியர் தலைமையில் வீரைவில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின்போது பல்துறை சார்ந்த 120 பிரமுகர்கள் பட்டமளித்து கௌரவிக்கப்பட விருக் கிறார்கள் (01)

## புலோலி மருதடி கந்தசுவாமி மகோற்சவம்


(உடுவில்)

புலோலி வடக்கு மருதடி அருள்மிகு கந்தசுவாமி கோவில் மஹோற்சவம் கடந்த 24ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

நாளை புதன்கிழமை காலை 10.00 மணிக்கு தேர்த் திருவிழாவும், வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (01)

## நல்லைக் கந்தன் மகோற்சவம்

### இன்று எட்டாம் நாள்



**கந்தனாய் ஆளிடம் நல்லையே!**

விண்ணவர் தேவர்தம் வெஞ்சிறை மீட்கவே
கண்ணுதல் தீயெழு கண்களிற் தோன்றியோன்
மண்ணினில் வாழ்வுறு மக்களாய் நாம்தொழ
அண்ணலாய் கந்தனாய் ஆளிடம் நல்லையே!

*- பண்டிதர் சி. கார்த்திகேசு*

**இரு கையால் உன்னை இரக்கின்றோம்!**

முருகனே நல்லைக் குமரனே முழுமுதற் பொருளே
ஒருகை முகன் தம்பியாய் ஓங்கும் புகழ்
தருபவனே வள்ளி தெய்வ யானை தலைவனே
இருகை யாலுன்னை இரக்கின்றோம் அருள்வாய்!

*- சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன்*

**நல்லூருறை திருமுருகா பள்ளி எழுந்தருளாயே!**

செங்கதிர்ச் செல்வனும் குணதிசை எழுந்தான்
செறியிருள் அகன்றது சிறந்தது வானம்
பொங்கருள் நான்மறை அந்தணர் புகன்றார்
புள்ளினம் ஆர்த்தன போந்தனர் அடியார்
திங்களின் பிறையணி சிவன்தருஞ் செல்வா
திருநல்லூருறை திருமுரு கோனே
எங்களை ஆட்கொளும் இன்னருட் கடலே
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே!

*வித்துவான் க. வேந்தனார்*
*(நல்லூர் திருப்பள்ளியெழுச்சி)*

## இன்றைய சிறப்பு நிகழ்ச்சிகள்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில்**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்றுவரும் சிறப்பு நிகழ்ச்சித் தொடரில் இன்று எஸ். பாலச்சந்திரன் "முருக வழிபாட்டில் அருணகிரிநாதர்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.

மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும் இன்றைய நிகழ்வின்போது திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க அறநெறிப் பாடசாலை, மாதகல் காந்திஜி அறநெறிப் பாடசாலை மற்றும் அரியாலை ஸ்ரீ துரவழி பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் சிறப்பு அம்சங்களாக இடம்பெறவிருக்கின்றன. (க)

*************************************************

**துர்க்காதேவி மணி மண்டபத்தில்**

நல்லூர் இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சித் தொடரில் இன்று திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா வழங்கும் இன்னிசை இடம்பெறுகிறது.

மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் இந்நிகழ்வின்போது ஏ. ஜெயராமன் (வயலின்) எஸ். மகேந்திரன் (மிருதங்கம்), ஆர். சிவராமன் (கெஞ்சிரா) ஆகியோர் பக்கவாத்தியம் வழங்குவார்கள். (க)

*************************************************

**நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில்**

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடந்துவரும் தெய்வீகப் பேருரைத் தொடரில் இன்று சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.


மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வு சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் அமைப்பாளர் மதுரகவி எம்.பி. அருளானந்தம் தலைமையில் இடம்பெறும். (க)

# ஈரான் மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல், அமெரிக்கா சதித்திட்டம்

ஈரான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபடுவதாக அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன.

ஆனால் ஈரான் இதை மறுத்து வருவதால், இந்த பிரச்சினையை சுமூகமாக முடிவுக்கு கொண்டு வர பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

ஈரான் அணுகுண்டு தயாரிப்பதை நிறுத்தாவிட்டால் அணு உலை மீது குண்டு வீசுவோம் என்று இஸ்ரேல் ஏற்கனவே மிரட்டல் விடுத்தது.



இதற்கிடையில் ஈரானுடன் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தால் அமெரிக்காவும், இஸ்ரேலும் சேர்ந்து ஈரானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையில் ஈடுபட திட்டமிட்டு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் தூதராக அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தாமஸ் டோனிலான் 2 வாரத்துக்கு முன்பு இஸ்ரேல் சென்றார்.

ஜெருசலேம் நகரில் அவர் இஸ்ரேல் பிரதமர் பென்சமின் நெதான் யாஹூவை சந்தித்து இது பற்றி ஆலோசனை நடத்தியதாக தெரிகிறது.

இதேபோல வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டனும் பேச்சு நடத்தியதாகவும் கூறப்படுகிறது. ஆனால் அமெரிக்கா, இஸ்ரேல் அதிகாரிகள் இது பற்றி நேரடியாக கருத்து தெரிவிக்க மறுத்து விட்டார்கள்.

# உலக பார்வை

## ஆண்கள் பாவாடை அணிந்து வர ஒக்ஸ்போர்ட் பல்கலைகழகம் அனுமதி



பெண்கள் கோட் அணிந்து செல்லவும், ஆண்கள் பாவாடை அணியவும் ஒக்ஸ் போர்ட் பல்கலைகழகம் அனுமதி அளித்துள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில், மாணவர்கள் அணிய வேண்டிய ஆடைகள் குறித்த விதிமுறை கடுமையாக பின்பற்றப்படுகிறது.


அங்கு ஆண்கள் கறுப்பு நிற கோட் மற்றும் பான்ட், கறுப்பு நிற ஷூ அணிய வேண்டும்.

பெண்கள் கறுப்பு நிற பாவாடையும், வெள்ளை நிற ஜாக்கெட்டும் அணிய வேண்டும்.

இந்நிலையில் திருநங்கைகள், பாலின மாற்றம் செய்து கொண்டவர்கள் தாங்கள் விரும்பும் ஆடையை அணிய அனுமதிக்கும்படி, நீண்ட நாட்களாக கோரி வந்தனர்.

இதன்படி ஆண்கள் பாவாடை மற்றும் ஸ்டொக்கிங்ஸ் அணியவும், பெண்கள் கோட் மற்றும் பேண்ட் அணியவும் பல்கலைக் கழக நிர்வாகம் தற்போது அனுமதி அளித்துள்ளது.

# எங்களது தொழில்நுட்பத்தை திருடுகின்றனர்: சாம்சங் மீது அப்பிள் நிறுவனம் வழக்கு





தென் கொரியாவின் சாம்சங் நிறுவனத்தின் மீது அப்பிள் நிறுவனம் தொடர்ந்த வழக்கு, நேற்று மீண்டும் அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

தான் உற்பத்தி செய்யும் மொடல்களை சட்ட விரோதமாக பின்பற்றி, ஸ்மார்ட் போன் மற்றும் டேப்லட் கணணிகளை சாம்சங் நிறுவனம் தயாரிப்பதாக, அப்பிள் நிறுவனம் கடந்தாண்டு வழக்கு தொடர்ந்தது.


மேலும் இதனால் ஏற்பட்ட ரூ.2500 கோடி நஷ்ட ஈடு வழங்க உத்தர விடுமாறும் கோரி இருந்தது.

ஆனால் சாம்சங் நிறுவனம் தாக்கல் செய்த பதில் மனுவில், அப்பிள் நிறுவனம் தான் தனது தொழில் நுட்பத்தைத் திருடுவதாகக் குற்றம் சாட்டியிருந்தது.



சிரியா வெளியுறவுத்துறை அமைச்சர் வாலித் அல் மௌலாம், டெக்ரானில் ஈரான் அதிபர் முகமது அகமத்ஜாத் அவரது அலுவலகத்தில் சந்தித்தார்.

# தலிபான்கள் தாக்குதலில் ஆப்கானிஸ்தான் ஆளுநர் முகமது இஸ்மால் வாபா படுகொலை



ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நடத்திய தாக்குதலில், சாக் மாகாணத்தின் ஆளுநர் முகமது இஸ்மால் வாபா கொல்லப்பட்டார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் தாக்குதல் சமீபகாலமாக அதிகரித்து உள்ளது.

நேற்று தலைநகர் காபூலில் இருந்து 30 கி.மீ தொலைவில் உள்ள சாக் மாகாணத்தின் ஆளுநர் முகமது இஸ்மால் வாபா தனது அலுவலகத்திற்கு காரில் சென்று கொண்டிருந்தார்.

அவரும் பாதுகாப்பு படையினரும் சென்றனர். அப்போது திடீரென தலிபான்கள் அவரின் காரை மறித்து துப்பாக்கி சூடு நடத்தியதில், வாபா கொல்லப்பட்டார்.

இந்நிலையில் ஆப்கானில் பல்வேறு பகுதிகளில் நேட்டோ படையினரும், பொலிசாரும் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதல்களில் 17 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 18 தீவி ரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

ஏராளமான வெடி குண்டுகளும், ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டன என்று அந்நாட்டு உள் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவில் கறுப்பின ஜோடிக்கு திருமணம் செய்து வைக்க மறுப்பு



அமெரிக்க தேவாலயத்தில் கறுப்பின ஜோடிக்கு திருமணம் செய்ய மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மிசிசிபி மாகாணத்தை சேர்ந்தவர்கள் சார்லஸ், டி ஆண்ட்ரியா. இவர்கள் கறுப்பினத்தவர்கள்.

இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து, இதற்காக இந்த மாகாணத்தின் கிறிஸ்டல் ஸ்பிரிங் பகுதியில் உள்ள தேவாலயத்தில் பாதிரியாரை தொடர்பு கொண்டுள்ளனர்.

இதற்கு பாதிரியார், இந்த தேவாலயம் கட்டப்பட்டது முதல் இதுவரையிலும் கறுப்பினத்தவர்களுக்கு திருமணம் செய்தது கிடையாது, எனவே உங்களுக்கும் திருமண சடங்கை இங்கே செய்ய இயலாது என்று தெரிவித்துள்ளார்.

இந்த தேவாலயத்தில் சார்லஸ் உறுப்பினராக இல்லை. ஆனால் ஆன்ட்ரியாவின் தந்தை மற்றும் உறவினர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

திருமணத்துக்கு பிறகு இந்த தேவாலயத்தில் உறுப்பினராக சார்லஸ் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் இவர்களுக்கு திருமணம் செய்ய முடியாது என கூறப்பட்டதால், வேறொரு தேவாலயத்தில் இவர்கள் திருமணம் செய்து கொண்டனர்.

# பிரான்சின் பிரபல கட்சித் தலைவர் லீ பென்னுக்கு அடிபணிந்தார் மடோனா



பிரபல பாடகி மடோனா தனது இசைக் கச்சேரியின் போது, திரையில் பிரபலங்களின் முகங்களோடு நாஜிக்களின் சின்னத்தை சேர்த்து காண்பித்ததால் பெரும் எதிர்ப்பு எழுந்தது.

பிரான்சின் தேசிய முன்னணி கட்சியின் தலைவர் லீ பென், மடோனா மீது வழக்கு தொடரப் போவதாக அறிக்கை விட்டிருந்தார்.

இதனையடுத்து அவர், திரையில் தலைவர்களின் முகங்களோடு சின்னத்தை சேர்த்துக் காண்பித்ததை நிறுத்தி விட்டார்.

பிரான்சில் வெளிநாட்டுக் கலைஞர்களை வரவேற்கும் வகையில் ஒரு இசைநிகழ்ச்சி ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது.

இந்த இசைநிகழ்ச்சியில் கடந்த 26ஆம் திகதி ஒலிம்பியா இசையரங்கில் சுமார் 2700 ரசிகர்கள் முன்னிலையில், நான் மரினா லீ பெண் அவர்களைக் கோபப்படுத்தி விட்டேன், பகைமையை உருவாக்க வேண்டும் என்பது எனது நோக்கமல்ல என்று தெரிவித்தார்.

இந்த இசைநிகழ்ச்சி கறுப்பு அமெரிக்கப் பாடகர்களான ஜோசபின் பேக்கர் மற்றும் சார்லி பார்க்கர் ஆகியோருக்கு வரவேற்பு அளித்தது.

இவர்கள் அமெரிக்காவில் ஏற்றத்தாழ்வான சூழ்நிலையைச் சந்தித்துள்ளனர். வின்செண்ட் வான் கோக், பாப்லோ பிகாசோ ஆகியோரையும் மடோனா வரவேற்றார்.

இந்த வரிசையில் ஓவியர் பால் காகுயின் பெயரும் இடம்பெற்றது. இவர் பிரான்சில் பிறந்தாலும் சிறுவயதிலேயே பிரான்சை விட்டு நகர்ந்து ஃபிரெஞ்சு பாலினேசியாவுக்குப் போய்த் தங்கிவிட்டார்.

இந்த இசை நிகழ்ச்சியில் பாடகர் எடித் பியாஃப் மற்றும் நடிகர் அலைன் டிலோன் போன்றோருக்கும் மரியாதை செலுத்தப்பட்டது.

ஒரு மணிநேரம் நடக்க வேண்டிய இந்த இசைநிகழ்ச்சி விரைவில் முடிந்துவிட்டதால் ரசிகர்கள் மிகவும் ஏமாற்றமடைந்தனர். இதனையடுத்து மீண்டும் மடோனா ஒகஸ்ட் 21ஆம் திகதி அன்று நைஸ் நகரில் இசைநிகழ்ச்சி நடத்த உள்ளார்.

## டைட்டானிக்கின் சாப்பாட்டு மெனு ஏலம்

கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலில் இருந்து கிடைத்த உணவு மெனு ரூ.40 லட்சத்துக்கு பிரிட்டனில் ஏலம் எடுக்கப்பட்டது. கப்பல் மூழ்கி 100 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, கப்பலில் இருந்து கைப்பற்றப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வந்த 100-க்கும் அதிகமான பொருள்கள் ஏலம் விடப்பட்டது. டைட்டானிக் கப்பலின் முதல் வகுப்பில் பயணித்த பயணிகளுக்கு பரிமாறப்பட்ட உணவு வகைகள் அடங்கிய மெனு (உணவு வகைகளின் பெயர் பட்டியல்) ரூ.40 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டது. மெனுவில், 1912 ஏப்ரல் மாதம் 12ஆம் திகதியிடப்பட்டிருந்தது.

# திருந்தாத ஜென்மங்கள் இருந்தென்ன இலாபம்? தமிழக முதல்வர் அதிரடி



மாநகராட்சியின் ஆளுங்கட்சி கவுன்சிலர்கள் சிலர் மீது, முதல்வர் ஜெயலலிதா நேரடியாக குற்றப்பத்திரிகை வாசித்து, அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தும், சில கவுன்சிலர்கள் திருந்தாமல் மீண்டும், அதே தவறுகளை செய்துள்ளனர். இதனால், முதல்கட்டமாக, வட சென்னை, தென் சென்னையைச் சேர்ந்த இரு கவுன்சிலர்களிடமிருந்து, பகுதி செயலர் பதவிகளை பறித்து, முதல்வர் ஜெயலலிதா அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளார்.

சென்னை மாநகராட்சியின், அ.தி.மு.க. கவுன்சிலர்கள் அனைவரையும் சமீபத்தில், முதல்வர் ஜெயலலிதா நேரடியாக சந்தித்தார். அப்போது, பல்வேறு புகார்களில் சிக்கிய, 71 கவுன்சிலர்களின் பெயர்களை குறிப்பிட்டு, அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளையும் தெரிவித்தார்.

ஒரு மாத காலத்திற்குள் கவுன்சிலர்கள் திருந்தவில்லை என்றால், மாநகராட்சியை கலைத்து விடுவேன் என, முதல்வர் ஜெயலலிதா எச்சரித்தார். இதைத் தொடர்ந்து, ஆளுங்கட்சியின் கவுன்சிலர்கள் அனைவரும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். துறைமுகம் பகுதியைச் சேர்ந்த கவுன்சிலர் ஆவின் அருள், சேப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த கவுன்சிலர் அலிகான் பஷீர் ஆகியோர், வகித்து வந்த பகுதி செயலர் பதவிகள் பறிக்கப்பட்டுள்ளன.

இவர்கள் இருவரும், ஏற்கனவே முதல்வர் ஜெயலலிதா வாசித்த புகார் பட்டியலில் இடம் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

துறைமுகம் பகுதியில், வட மாநில பிரமுகர்கள் கட்டி வரும் கட்டடங்களுக்கு நோட்டீஸ் அனுப்ப வைத்து, அவர்களிடம் கறாராக நடந்து கொண்டதாக, கவுன்சிலர் அருள் மீது மீண்டும் புகார்கள் எழுந்தன.சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி பகுதியில், மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில், கார் நிறுத்துமிடம் நடத்தி வந்தது உள்ளிட்ட புகார்கள், அலிகான்பஷீர் மீது குவிந்துள்ளன. இதையடுத்து, இருவரும் வகித்து வந்த, பகுதி செயலர் பதவிகளை, முதல்வர் ஜெயலலிதா அதிரடியாக பறித்துள்ளார்.

# இந்திய ரயிலில் தீ விபத்து: 47 பேர் பலி



இந்தியாவில் அதிவேக ரயிலொன்றில் மின்னொழுக்குக் காரணமாக ஏற்பட்ட தீ விபத்தால் 47 பேர் பலியாகியுள்ளனர்.

புதுடில்லியிலிருந்து சென்னை நோக்கி வந்த தமிழ்நாடு அதிவேக ரயிலிலேயே மின்னொழுக்குக் காரணமாக இத்தீ விபத்து ஏற்பட்டது. தமிழ்நாடு அதிவேக ரயில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 10 மணிக்கு புதுடில்லியிருந்து புறப்பட்டு நேற்று அதிகாலை 4.30 மணிக்கு நெல்லூர் ரயில் நிலையத்தை வந்தடைந்தது. நெல்லூர் ரயில் நிலையத்திலிருந்து சென்னை நோக்கிப் புறப்பட்ட இவ் ரயில் சில நிமிடங்களிலேயே தீப்பிடித்துள்ளது.

தீயில் கருகிய நிலையில் 25 சடலங்களும் தீக்காயங்களுடன் 20 இற்கும் அதிகமானோர் உடனடியாக மீட்கப்பட்டனர்.

இத்தீ விபத்துக் காரணமாக காயமடைந்தவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**ஒலிம்பிக் தொடக்க விழா:**

# இந்தியக் குழுவினருடன் வந்த பெண்ணின் விபரம் அம்பலம்



லண்டனில் நடக்கும் ஒலிம்பிக் அணிவகுப்பில் இந்தியக் குழுவினருடன் வந்த மர்மப் பெண் பற்றிய விவரம் அம்பலமாகியுள்ளது.

லண்டனில் நடைபெற்று வரும் 30வது ஒலிம்பிக் போட்டிகளுக்கான தொடக்க விழா அணிவகுப்பில் இந்திய குழுவுக்கு தலைமை ஏற்று, மூவர்ணக் கொடியுடன் சுஷில் குமார் வந்தார்.

இவருக்கு மிக அருகே சிவப்பு சர்ட், நீல நிற பேண்ட் அணிந்த பெண் ஒருவர், எவ்வித அடையாள அட்டையும் இல்லாமல் வந்தார். இவர் யாரென்று தெரியவில்லை. இது தொடர்பாக இந்தியக் குழுவின் தலைவர் முரளிதரன் ராஜா, முறைப்படி புகார் அளித்தார்.

இது குறித்து லண்டன் ஒலிம்பிக் ஒருங்கிணைப்பு வாரியத்தின் தலைவர் செபாஸ்டியன் கோ கூறுகையில், சர்ச்சைக்குரிய அந்தப் பெண், ஒலிம்பிக் தொடக்க விழாவில் பங்கேற்ற நடனக் கலைஞர்களில் ஒருவர் தான்.

கொஞ்சம் அதிகமாக உணர்ச்சிவசப்பட்டு விட்டார் என நினைக்கிறேன். அணிவகுப்பில் கலந்து கொண்டிருக்க கூடாது. இது பற்றி விசாரணை நடத்தப்படும். ஒலிம்பிக் மைதானத்துக்குள் அனைத்து விதமான சோதனையை கடந்து தான் நுழைந்துள்ளார்.

இந்திய குழுவுக்கு அல்லது விழாவுக்கு எவ்வித ஆபத்தையும் அவர் ஏற்படுத்த வாய்ப்பில்லை. இந்திய குழுவினருடன் பேசி பதட்டத்தை போக்க முயற்சி மேற்கொள்வேன் என்றார். இதற்கிடையே அந்தப் பெண் பற்றிய விவரம் வெளியாகியுள்ளது.

பெங்களூரை சேர்ந்த இவரது பெயர் மதுரா. முதுநிலை பட்டம் பெற்ற இவர், ஒலிம்பிக் அனுமதிச்சீட்டு உள்ளிட்ட விபரங்களை இணையதளத்தில் வெளியிட்டுள்ளார். சர்ச்சை கிளம்பிய பின்பு பேஸ்புக்கிலிருந்து திடீரென விலகியுள்ளார். இச்செயலுக்கு, மதுராவின் தந்தை நாகேந்திரா அனைவரிடமும் மன்னிப்பு கேட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், தொடக்க விழா நடன நிகழ்ச்சிக்காக எனது மகளை, இயக்குநர் டேனி பாய்ல் அதிகாரப்பூர்வமாக தெரிவு செய்தார். கடந்த சில மாதங்களாக நடந்த ஒத்திகையில் கலந்து கொண்டார்.

இந்தியர் என்ற காரணத்தால், இந்தியக் குழுவினரை மைதானத்திற்குள் அழைத்துச் செல்லும் பொறுப்பை அமைப்பாளர்கள் அவரிடம் ஒப்படைத்து இருக்கலாம். இது நமது குழுவினரின் உணர்வுகளை பாதித்து இருந்தால் இதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால், இதில் பாதுகாப்பு எதுவும் மீறப்படவில்லை என்றும் எனது மகள் இன்னும் சில தினங்களில் பெங்களூர் திரும்புவார் எனவும் அவர் கூறியுள்ளார்.

# துப்பாக்கி முனையில் இந்தியர் மூவர் கடத்தல்

பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தான் மாகாணத்தில் ஆயுதமேந்திய அடையாளந்தெரியாத சிலர், இந்திய வர்த்தகர்கள் மூவரை கடத்திச் சென்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


பலுசிஸ்தான் தலைநகர் குவெட்டாவிலிருந்து 140 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு பகுதியிலிருந்து கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு இவர்கள் கடத்தப்படடுள்ளனர்.

தினேஷ் குமார், ரிதேஷ் குமார், ரத்தன் குமார் என்கிற பெயர்களையுடைய இம்மூவரே கடத்தப்பட்டுள்ளனர். எனவே இப்பகுதியில் உள்ள வர்த்தகர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று இப்பகுதி வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

குடும்ப நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த இம்மூன்று வர்த்தகர்களின் காரை இடைமறித்த சிலர், இவர்களை துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

# இந்திய செய்திகள்

## தே.மு.தி.க.வை உடைக்கச் சதி: கண் விழித்துக்கொண்டார் விஜயகாந்த்



தமிழ்நாட்டின் எதிர்க்கட்சியான தே.மு.தி.க.வை ஆளுங்கட்சி அ.தி.மு.க. உடைக்க சதி செய்ததாகவும் அதை விஜயகாந்த் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுத்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.


தே.மு.தி.க தலைவர் விஜயகாந்தின் மனைவி வழி சொந்தமான சங்கீதா என்ற பெண், இந்த காரியத்திற்கு மூளையாக செயற்பட்டிருக்கிறார்.

இவருக்கும் அ.தி.மு.க. எம்.எல்.ஏ மணிமாறன் என்பவருக்கும் நெருக்கமான நட்பு இருந்ததாக கூறப்படுகிறது. எந்த ஒரு பிரச்சினை தனக்கு வந்தாலும் மணிமாறனையே சங்கீதா அணுகுவார்.

இந்நிலையில் தே.மு.தி.க. எம்.எல்.ஏக்களை அ.தி.மு.க.வின் பக்கம் கொண்டு வந்தால் தக்க வெகுமதி கிடைக்கச்செய்வதாக சங்கீதாவிடம் அ.தி.மு.க. எம்.எல்.ஏ கூறியுள்ளார். இந்நிலையில் இந்த தகவல் தலைவர் விஜயகாந்திற்குச் சென்றுள்ளது.

உடனே விஜயகாந்த் கடுமையான நடவடிக்கை எடுத்ததோடு அவரை கட்சியின் முக்கிய பதவியிலிருந்து தூக்கிவிட்டார்.

தே.மு.தி.க.விடம் தற்போது 29 எம்.எல்.ஏக்கள் உள்ளனர். அவர்களை தன் பக்கம் இழுத்துவிட்டால் எதிர்க்கட்சி அந்தஸ்திலிருந்து வெகுவிரைவில் தே.மு.தி.க. வெளியேறி விடும் என்ற காரணத்தின் அடிப்படையில் அ.தி.மு.க. இந்தச் சதியை மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது.



சென்னையில் உள்ள அம்மன் கோயில்களில் ஆடித் திருவிழா ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கோலாகலமாக நடந்து வருறது. கொரட்டூர் நாகவல்லி அம்மன் கோயில் திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு ராட்டின காவடி எடுத்து சென்று தங்களது நேர்த்திக் கடனை செலுத்தினர்.

## ஊழல் இல்லாத மாநிலம் குஜராத்: பாபா ராம்தேவ்



குஜராத் மாநிலத்தில் ஊழல் மற்றும் முறைகேடு ஏதும் இல்லை என யோகா குரு பாபா ராம்தேவ் கூறியுள்ளார்.

ஆமதாபாத்தில் நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ராம்தேவ் கூறுகையில், அனைவரும் குஜராத்தில் ஊழல் ஏதும் இருக்கிறதா எனக் கேட்கின்றனர்.

ஆனால் இங்கு ஊழல் எதையும் நான் கண்டுபிடிக்கவில்லை. நரேந்திர மோடி எந்த தவறையும் செய்யவில்லை.

காங்கிரஸ் தலைமையிலான மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் ஊழல் செய்த அமைச்சர்கள் சிறையில் உள்ளனர் எனக் கூறினார்.

இந்நிலையில் ராம்தேவின் கருத்துக்கு அன்னா குழுவை சேர்ந்த சஞ்சய் சிங் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## பல்லி விழுந்த சாம்பாரை சாப்பிட்ட மாணவிகளுக்குத் தீவிர சிகிச்சை

தமிழ்நாடு, இராமநாதபுரத்தில் செயற்பட்டு வருகின்ற மாணவியர் விடுதி ஒன்றில் பல்லி விழுந்த சாம்பாரை சாப்பிட்ட மாணவிகள் தீவிர சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரத்தில், சத்யா அம்மையார் என்ற அரசு ஆதரவற்ற மாணவியர் விடுதியொன்று செயற்பட்டு வருகிறது.

இவ்விடுதியில் 109 மாணவிகள் தங்கி, படித்து வருகின்றனர். இந்நிலையில் நேற்றுக் காலை இம்மாணவிகளுக்கு உணவு பரிமாறப்பட்டது.

சாம்பாரில் பல்லி விழுந்ததை யாரும் கவனிக்காத நிலையில், அந்த உணவு மாணவிகளுக்கு வழங்கப்பட்டது. சிறிதுநேரத்தில், உணவை சாப்பிட்ட மாணவிகளுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டதனையடுத்து சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

# பர்தாவுக்குத் தடை எனில் புறக்கணிப்பு

## -சவுதி மிரட்டல்



லண்டன் ஒலிம்பிக் போட்டியில் சவுதி அரேபிய வீராங்கனைகள் முதன் முறையாக பல்வேறு போட்டிகளில் பங்கேற்கிறார்கள். இதில் மகளிர் ஜூடோ போட்டியில் மோதும் சவுதி வீராங்கனைகள் முஸ்லிம் மத வழக்கப்படி பர்தா அணிய அனுமதிக்க வேண்டும் என்று சவுதி அரேபியா கோரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து லண்டனில் நேற்று முன்தினம் சர்வதேச ஜூடோ கூட்டமைப்பு ஆலோசனை கூட்டம் தலைவர் மரியஸ் வியெர் தலைமையில் நடந்தது. அதில் பர்தா அணிவதால் ஏற்படும் சாதக பாதகங்கள் பற்றி விவாதிக்கப் பட்டது.

ஜூடோ வீராங்கனை தனது தலையில் முககவசம் போல் உடை அணிந்து மோதுவது கடினம். மேலும் அது பாதுகாப்பானதும் அல்ல, தவிர இது ஜூடோ போட்டி முறைக்கெதிரானது என்று கருத்து தெரிவிக்கப்பட்டது.

ஜூடோ போட்டியில் வீராங்கனைகள் மோதிக் கொள்ளும் போது தலையை மறைக்கும் விதமாக பர்தா அணிந்து இருந்தால் ஆபத்தை விளைவிக்கும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

ஆனால் சவுதி அரேபிய பிரதிநிதி கூறுகையில், எங்கள் நாட்டு வழக்கப்படி தலையில் பர்தா அணிய அனுமதிக்க வேண்டும் என்றும் ஆசிய ஜூடோ கூட்டமைப்பானது முஸ்லிம் பெண்கள் தலையில் பர்தா அணிய அனுமதித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே சர்வதேச ஜூடோ கூட்டமைப்பும் அனுமதிக்க வேண் டும்.

அனுமதி மறுத்தால் ஒலிம் பிக் போட்டியையே புறக்கணிப் போம் என்று சவுதிஅரேபியா மிரட்டல் விடுத்துள்ளது.



வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவ... இடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் ம... இரண்டாம் இடத்தைப் பெற்ற கிளிநொச்சி மாவட்ட அ... காணலாம்.

வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அ... நொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலர் சதானந்தன் ம... அலுவலர்களும் காணப்படுகின்றார்கள்.

# தொடர்ந்து பதக்கம்



5 நாடுகளில் நடந்த ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் தனிப்பட்ட முறையில் தொடர்ச்சியாகப் பதக்கம் வென்றவர் என்ற பெருமையை துப்பாக்கி சுடும் அமெரிக்க வீராங்கனையான கிம்பர்லி றோட் பெற்றிருக்கிறார். இந்தத்தடவை அவர் பெண் களுக்கான ஸ்கீட் துப்பாக்கி சுடும் போட்டியில் பதக்கம் வென்றிருக்கிறார்.

# மைதானங்களில் ஊதுகுழலுக்குத் தடை

விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் அரங்குகளில் ஊதுகுழல்கள் பயன்படுத்தப்படுவது தடை-செய்யப்பட்டுள்ளது.

இத்தடை இன்றுடன் அமுலுக்கு வருவதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அரங்கிலுள்ள பார்வையாளர்களின் சௌகரியத்தையும் பாதுகாப்பையும் கருத்திற்கொண்டே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் "பாண்ட்" இசைக் கருவி களுக்கு இத்தடை விதிக்கப்பட வில்லை எனவும் இவ் விதிகள் இன்று முதல் அமுல் படுத்தப் படும் எனவும் ஸ்ரீலங்கா கிரிக் கெட் தெரிவித்துள்ளது.

அரங்குகளில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சோதனைகளை மேற்கொள்வர் எனவும் தடைசெயயப்பட்ட பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவை பறிமுதல் செய்யப்படும் எனவும் பொது மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

# கள்ளச்சந்தையில் ஒலிம்பிக் ரிக்கெற்று...

லண்டன் ஒலிம்பிக் போட்டியைக் காண வரும் ரசிகர்களிடம் கள்ளச்சந்தையில் ரிக்கெற்றுக்கள் விற்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது.

இப்போட்டிகளில் முக்கிய போட்டிகளை பார்க்க ரிக்கெற்றுக்கள் ஒலிம்பிக் குழு சார்பில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்த ரிக்கெற்றுக்கள் ஆயிரக் கணக்கில், அறிவிக்கப்பட்ட விலையை விட 10 மடங்கு அதிகமாக கள்ளச்சந்தையில் விற்கப் படுவதாக புகார் எழுந்தது. இதனை பிரிட்டனிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.

இதைத்தொடர்... ஸகொட்லண்ட் ய... விசாரணையில் ... மேலும் ரிக்கெற்... உரிமை பெற்றிருந்... களிடம் விசாரணை... கின்றனர்.

இதுபோன்று ... களுக்கு அதிகளவ... றுக்கள் விற்பனை ... கூறப்பட்டாலும், இ... போட்டிகளுக்கு ... வெற்றிச்சோடி இருப்ப... முடிகிறது என்பது ... கது.

# ஒலிம்பிக்கில் பதக்க வேட்டையாடும் சீனா

லண்டனில் இடம்பெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகளில் சீனா தொடர்து பதக்க வேட்டையாடி வருகின்றது.

நேற்று முன்தினம் வரை இடம் பெற்ற போட்டிகளில், பதக்கப் பட்டியலில் முன்னிலை வகிக்கும் முதல் 10 நாடுகள் வருமாறு:-

| நிலை | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 6 | 4 | 2 | 12 |
| 2 | ஐ.அமெரிக்கா | 3 | 5 | 3 | 11 |
| 3 | இத்தாலி | 2 | 3 | 2 | 7 |
| 4 | தென்கொரியா | 2 | 1 | 2 | 5 |
| 5 | பிரான்ஸ் | 2 | 1 | 1 | 4 |
| 6 | வடகொரியா | 2 | 0 | 1 | 3 |
| 7 | கஸகஸ்தான் | 2 | 0 | 0 | 2 |
| 8 | ஹங்கேரி | 1 | 1 | 1 | 3 |
| 8 | அவுஸ்திரேலியா | 1 | 1 | 1 | 3 |
| 8 | பிறேசில் | 1 | 1 | 1 | 3 |

# சங்காவின் உபாதை துரதிர்ஷ்டம் -ம...

இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவின் உபாதை துரதிர்ஷ்டவசமானது என அணித் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார். எனினும் இந்த உபாதை காரண மாக குமார் சங்கக்காரவிற்கு சிறந்த ஓய்வொன்று கிடைக்கும் என தான் எண்ணுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2 வருடங்களில் குமார் சங்கக்காரவிற்கு ஓய்வு கிடைக்கவில்லை எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, துரதிர்ஷ்டவசமான இந்த உபாதை மூலம் அவருக்குக் கிடைக்க வேண்டிய ஓய்வொன்று கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.



இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 3ஆவது ஒரு நாள் சர்வதேச போட்டியில் குமார் சங்கக்கார துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் போது அஷோக் டின்டாவின் பந்துவீச்சில் விரலில் தாக்கப்பட்டார். அவர் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடிய போதும் ஆட்டமிழந்த பின்னர் ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது அவரது விரல் எலும்பில் முறிவு ஏற்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

காயமடைந்துள்ள ... கக்கார 4 தொடக்க... களுக்கு கிரிக்கெட் ... பங்குபற்ற முடியாது ... இதன் காரணமாக இ... எதிரான அடுத்த 2 ... லும் எஸ்.எல்.பி.எல் ... லும் பங்குபற்ற முடி... ஏற்பட்டுள்ளது. குமா... இந்த ஓய்வையடு... போட்டிகளில் புத்து... பங்குபற்றுவார் என ... தாகத் தெரிவித்த ம... வர்தன, இலங்கையி... பரில் இடம்பெறவுள்... ருவென்ரி-20 தொட... பற்றத் தயாராக இரு... நம்புவதாக தெரிவித்...

# ஓய்வு இப்போது இல்லை - சச்சின்



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சச்சின் ரெண்டுல்கர் தனது ஓய்வு குறித்து சூசகமாக பதிலளித்துள்ளார். இந்திய கிரிக்கெட் அணியின் "மாஸ்ரர் வட்ஸ்மன் "சச்சின் ரெண்டுல்கர் சதத்தில் சதம் அடித்து உலக சாதனை நிகழ்த்தியுள்ளார். ஒரு நாள், டெஸ்ட் என்று இரண்டு போட்டிகளிலும் அதிக பட்ச ஓட்டங்கள், பௌண்டறிகள் என்று யாரும் இலகுவில் நெருங்க முடியாத தூரத்தில் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

தற்போது அவருக்கு 39 வயதாகிறது. அவர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து விலகுவார் என்று கூறப்பட்டு வந்தது. ஆனால் அவசர அவசரமாக அந்த தகவல்களை மறுத்த ரெண்டுல்கர். தற்போதைக்கு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் எண்ணம் இல்லை என்று கூறிவிட்டார்.

இந்நிலையில் மும்பையில் நேற்று முன்தினம் பி.எம்.டபிள்யூ புதிய ரக கார் அறிமுகவிழாவில் கலந்து கொண்ட ரெண்டுல்கர் ஊடகவியலாளரிடம் கூறுகையில், தற்போது என் முழு கவனமும் கிரிக்கெட்டில்தான் உள்ளது.

5 அல்லது 6 ஆண்டுகளுக்குப் பின்புதான் என்ன செய்வது என்று முடிவு செய்ய வேண்டும்.

45 வயது வரை கிரிக்கெட் விளையாடுவேன் என்பதை டெண்டுல்கர் சூசகமாக உணர்த்தியுள்ளார். எனவே டெண்டுல்கர் தற்போதைக்கு சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறமாட்டார் என்பது உறுதி.

# நீச்சலில் சீனா சாத...

ஒலிம்பிக் மகளிர் 400 மீற்றர் மெட்லி நீச்சல் போட்டியில் சீனாவின் ஜீயிவென் தங்கம் வென்றதோடு, உலக சாதனையும் படைத்தார்.

சனிக்கிழமை இரவு நடைபெற்ற இந்தப் போட்டியில் ஜீயிவென், 4 நிமிடம் 28 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்ததன் மூலம் உலக சாதனைக்கு சொந்தக்காரரானார். ஜீயிவென்னுக்கு 16 வயதே ஆகிறது. பீஜிங் ஒலிம்பிக்கில் அவுஸ்தி ரேலியாவின் ஸ்டெபானி ரைஸ் 4 நிமிடம் 29 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து தங்கம் வென் றதே இதுவரை உலக சாதனை யாக இருந்தது.

இப்போது அதை ஜீயிவென் தகர்த்துள்ளார். கடந்த முறை உலக சாதனை படைத்த ஸ்டெபானி ரைஸுக்கு இந்த ஒலிம்பிக்கில் 6ஆவது இடமே கிடைத்தது.



ஜீயிவென்னுக்கு அ... யாக 4 நிமிடம் 31 விந... பந்தய தூரத்தைக் கடந்... ரிக்காவின் எலிசபெத் ... வெள்ளிப் பதக்கத்தையு... வின் மற்றொரு வீராங்கனை... (4 நிமிடம், 35 விநாடி)... கலப் பதக்கத்தையும் வெ...

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 31.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்...